தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்: புழுதிவாரித், தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து சொல் [illegible] வேன்! ஏற்றதொரு கருத்தை என(து உள்ளம் என்றால் எடுத்துரைப்பேன் ; எவர் வரினும் நில்லேன் ; அஞ்சேன்!"

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. வெளி நாடு மூன்றணா. காரியாலயம்: 'தென்றல்' சென்னை-14.

மலர் 1 | சென்னை | 16—10—1954 | சனிக்கிழமை | இதழ் 16

வென்றது! வென்றது! தர்மம் வென்றது!

விழுப்புரம் தொகுதியில் ஐயாயிரத்து சொச்சம் வாக்குகள் அதிகம் பெற்று, தோழர் கோவிந்தசாமி வென்றார்.

'நவீன் காங்கிரஸ்' நடராச கவுண்டர் தோற்றார்.

லால்குடித் தொகுதியில் ஆயிரத்துச் சொச்சம் அதிக வாக்குகள் பெற்று அம்பில் தர்மலிங்கம் வென்றார்.

'ஸ்பெஷல் காங்கிரஸ்' ராசா சிதம்பரம் தலைகுப்புற பல்டியடித்தார்.

இந்த இரு செயதிகளும் வந்தபோது, ஒரு அடி உயரத்திற்கு மேல் அதிகமாக வளர்ந்து விட்டேன் உற்சாகத்தினால் !

தோழர் ராமசாமி படையாச்சியின் துரோகம் நாடறிந்தது. அவர் தமது துரோகத்தோடு நில்லாமல், தகுதியும் அரசியல் நாகரீகமும். நேர்மையும் கொண்டு போட்டியிட்ட தோழர் கோவிந்தசாமியைத் தோற்கடிப்பதற்கு அரும்பாடு பட்டார். தெருத்தெருவாகக் கூவினார், 'நான் பரமயோக்யன்' கோவிந்தசாமியை நீங்கள் தோற்கடித்து, எனக்காக நடராச கவுண்டரை ஜெயிக்க வைக்க வேண்டும்! என்றெல்லாம் 'ஜெய்ஹிந்த்' வேண்டுகோள் விட்டார். அரசியல் ஒழுக்கக்கேடு எவ்வளவு உண்டோ அவ்வளவையும் கடைப்பிடித்தார்! ஆனாலும் நேர்மை வென்றது! தேர்தல் வரலாற்றிலேயே இல்லாதஅளவு அதிக வாக்குகள் பெற்றுத் தோழர் கோவிந்தசாமி வென்றார்,

தோழர் ராஜா சிதம்பரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், "கிடைக்கட்டு பதவிப் பித்தர் !" என்கிற ஒரே வரியில் முடித்து விடலாம். பதவி கிடைப்பதானால் எதை வேண்டுமானாலும்செய்யஅவர்தயாராகி விடுவார். பல ஆண்டுகளாக மாவட்டக் கழகத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்தார். திருச்சி மாவட்டக் கழகம் என்றாலே ராஜா சிதம்பரம் பெயர்தான் நினைவுக்கு வரும்; அவ்வளவு பெரிய ஆதிக்கம் ! கடந்த எம். எல். ஏ தேர்தலில், தி. மு. கழகத்தின் நிபந்தனை ஏட்டில் கையெழுத்துப் போட்டார். 'திராவிட நாட்டுக்காகப் பாடுபடுவேன்' என்று மேடைகளிலெல்லாம் உறுதி கூறினார் ! மாவட்டக் கழகத் தேர்தலிலே "மாடுகளே நல்லவை!" என்று காங்கிரஸுக்குத்தாவினார் ! இவ்வளவும் லால்குடி வட்டாரமக்களுக்கு நன்கு தெரியும்.

தோழர் தர்மலிங்கம், பரமசாது. திராவிட முன்னேற்றக் கழக—திருச்சி மாவட்ட செயலாளர் உலகத்தில் எதிரிகளே இல்லாத சிலர் உண்டென்றால் அவர்களில் தர்மலிங்கம் ஒருவர் எப்போதும் அந்தப் புன்னகை அவரது உதடுகளை விட்டு நீங்கியதில்லை. கழகக் கொள்கைகளில் சிறிதும் பிறழாதவர் கையில் இருக்கும் பணத்தை கேட்பவருக்குக் கொடுத்து விட்டு, தான் பட்டினிக்கிடக்கப்பழகியவர். கல்லக்குடி வழக்கில் அவர் ஒரு எதிரி. கல்லக்குடி போராட்டத்தில், பெரும் பங்கு கொண்டவர். திருச்சி மாவட்ட மக்களுக்கு அவர் செல்லப்பிள்ளை. ஏழை விவசாயி; அவரது இதயம் அன்புக் கடல்—இந்த புகழ்தான் அவருக்கிருந்த ஒரே சொத்து ராஜா சிதம்பரத்தைப் போல் பணம் படைத்தவர் அல்ல. ஆனாலும் மக்கள் சக்தி அவருக்கிருந்தது,

தி. மு. கழக ஆதரவைப் பெற்று ராஜா சிதம்பரம் சட்டசபைத் தேர்தலில் வென்றார்.

காங்கிரஸ் ஆதரவைப் பெற்று மாவட்டக்கழகத் தேர்தலில் தோற்றார்.

அவரை, கடந்த தேர்தலில் வெல்லவைத்து, ராஜா சிதம்பரத்தின் நெருங்கிய நண்பர் என்று கூறப்பட்ட தர்மலிங்கம் ராஜா சிதம்பரத்திடம் நெருங்கிய அன்பு கொண்டவர் என்று கூறப்பட்ட தர்மலிங்கம்......

"அவரையா இவர் எதிர்ப்பார்?" என்று காங்கிரஸ்காரர்களால் கருதப்பட்ட தர்மலிங்கம், எதிர்த்தார்! வென்றார்!

ஏன் எதிர்த்தார் ! நட்பு அறுபட்டு விட்டதென்றா? இல்லை! ராசா சிதம்பரம் செய்த மகத்தான துரோகம்! ஆத்திரமாகக் கூறினால் "பச்சையான இழிபோக்கு!" அதனால்தான் அந்த ஒரே காரணத்தினால்தான் தர்மலிங்கம்எதிர்த்தார். எதிர் சாரியில் பலம் விளையாடியது ! புகழ் விளையாடியது! நல்லவன் என்ற புகழ்—யோக்கியன் என்ற பெயர்—அது தர்மலிங்கத்தை ஜெயிக்க வைத்தது.

நேர்மை வென்றது !

"கீழ்க்குணம்" தோற்றது.

இந்தப் பாடம்தான் விழுப்புரம் தேர்தலும் ! மக்கள் மடையர்களல்ல. "நீ யாராயிருந்தாலும் சரிதான். யோக்கியனாக நடந்து கொண்டாயா?" என்பதுதான் பொதுமக்கள் கேள்வி' அக்ரமக்காரர்கள் துரோகிகள் இனி நாட்டில் பதவி வேட்டை ஆட முடியாது என்பதை இது குறிக்கிறது! இதே பாடத்தை அடுத்த பொதுத்தேர்தல், காட்டத்தான் போகிறது. மாணிக்கவேல் நாயகர் மண் கவ்வத்தான் போகிறார் ராமசாமி படையாச்சி ஜாமீன் இழக்கத்தான் போகிறார்! வீடணாம் ஒழியத்தான் போகிறது' இன்றும்—நாளையும் —என்றும் பதவி வெறியர்கள் அரசியல் அனாதைகள் துரத்தி அடிக்கப் படத்தான் போகிறார்கள், அந்த நாள் வெகுதூரத்தில் இல்லை!

—கண்ணதாசன்

"எண்ணங்கள் அனைத்தும் உயர்ந்தனவாக இருக்கட்டும்; பிறரால் அவைகள் தள்ளப்பட்டாலும்-அவைகள் என்றும் உயர்ந்தவைகளே யாகும்" —**வள்ளுவர்**

"ஒருவரைப் புகழ்வதில் இரண்டு ரகம் இருக்கிறது ஒன்று உள்ளத்தில் இருந்து மலர்வது - மற்றது உதட்டிலிருந்து பிறப்பது" —**அறிஞர் அண்ணா**

"சிந்தனையின்றி படிப்பது வீண் ; படிப்பின்றி சிந்திப்பது ஆபத்து" —**கன்பூசியஸ்**

"வெளிப்படையாகக் கூறும் கசப்பான உண்மை, உலகத்தினருக்கு ஆரம்பத்தில் பிடிப்பதில்லை" —**வி. ச. காண்டேகர்**

"காதலில் தேனும் இருக்கிறது—எட்டியும் இருக்கிறது" —**பிளாட்டோ**

தோற்றது ! தோற்றது ! வீடணம் தோற்றது !

எண்ணம்

கண்ணதாசன்

[சென்ற இதழ் தொடர்ச்சி]

தன்னை நாலுபேர் கவனிப்பதைப் பார்த்த இளநங்கைக்கு ஏற்படுகிற வெட்கம், பத்திரிகை ஆசிரியனுக்கு ஏற்படுகிறது. அந்த வெட்கம், நங்கையை மேலும் அழகு படுத்துவது போல், பத்திரிகை ஆசிரியனையும், பத்திரிகையையும் அழகு படுத்துகிறது. ரசிகர்களுடன் உறவு கொண்டாடி, கடிதங்கள் மூலம் பரிமாறிக் கொள்வதிலும், பத்திரிகையில் சந்திப்பதிலும் ஒரு அலாதியான மகிழ்வு பிறக்கத்தான் செய்கிறது. இதைச் சில பத்திரிகைக்காரர்கள் விரும்புவதில்லை. இன்று நேற்றல்ல; வெகு காலமாகவே சில பத்திரிகைக் காரர்கள், ரசிகர்களுடன் உறவு கொண்டாடுவது 'பெரிய' பத்திரிகைகளுக்குத் தகுதியல்ல என்று கருதுகிறார்கள். ரசிகர்களின் உறவு 'தீக்காய்தல்' போலத்தான் இருக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். காரணம், ரசிகர்களிடமிருந்து வெகு உயரத்தில் தாங்கள் இருப்பதாகவும் ரசிகர்களுக்கு குருவாக அமர்ந்திருப்பதாகவும் எண்ணம். நான் குறிப்பிடுவது "ஆனந்த விகடன்" போன்ற ஆரியப் பத்திரிகைகளைத்தான். நமது இயக்கப் பத்திரிகைகளுக்கு அந்த வேற்றுமை கிடையாது. ரசிகர்களைப் பத்திரிகையில் அடிக்கடி குறிப்பிட்டதில்லையே தவிர, ரசிகர்களின் விருப்பத்தை 'மெஜாரிட்டி' பார்த்து நமது பத்திரிகைகள் பூர்த்தி செய்து வந்திருக்கின்றன.

பூரா ரசிகர்களையும் திருப்தி செய்வது என்பது நிச்சயமாக யாராலும் முடியாது. 'மெஜாரிட்டி' க்குக் கட்டுப் படுகிற ஜனநாயக முறை பயன் தரும். பூராப் பேரையும் திருப்தி செய்யப் புறப்பட்டால் அப்பனும் மகனும் கழுதை விற்கப் போன கதையாகி விடும். 'தென்றலை' எடுத்துக் கொண்டால், அதன் பன்னிரண்டு பக்கத்துக்கும் 'விரும்புபவர்கள் இருக்கிறார்கள்; வெறுப்பவர்களும் இருக்கிறார்கள். இதிலே எவ்வளவு பேர் எதை விரும்புகிறார்கள் என்பதைமட்டும் அடிக்கடி கவனிப்பதில் நான் அக்கரை காட்டுகிறேன்.

சுருக்கமாகச் சொன்னால், நண்பர் **'சிலம்பின் செல்வன்'** எழுதும் **'கட்டபொம்மன்'** நாடகத்தை தாங்கள் விரும்பிப் படிப்பதாக 430 தோழர்கள் கடிதம் எழுதியுள்ளனர். 17 தோழர்கள், தாங்கள் விரும்பவில்லை என்பதோடு வெறுப்பதாகவும் எழுதியுள்ளனர். அதிலே மதுரையைச் சேர்ந்த, 'திராவிடமணி' என்னும் தோழர். "எங்களுக்கு கட்டப்பொம்மனும் வேண்டாம்; ரப்பர் பொம்மனும் வேண்டாம்" என்கிறார். திருநெல்வேலித் தோழர் ஒருவர் (காங்கிரஸ்காரர் என்று குறித்துள்ளார்.) "கட்டபொம்மன் தேசிய விடுதலை விரன் என்பது பித்தலாட்டம் என்றும், அவன் தன் பாளையத்தைக் காப்பதற்காக பதறியவன்" என்றும் குறிக்கிறார். இதேகருத்தை, சிங்காநல்லூர் தொழிலாளத் தோழர்கள் அறுவர் ஒரே கடிதத்தில் கூறியுள்ளனர். கட்டப்பொம்மன் எதற்காகப் போராடினான் என்கிற ஆராய்ச்சியைக் காட்டிலும் அவன் யாரை எதிர்த்துப் போராடினான் என்கிற ஆராய்ச்சிதான் அவனைத் தேசிய வீரனாக்கிற்று. ஆகவே, அவனை 'விடுதலை விரும்பி' யாகக்கொள்வதில் தவறில்லை என்றே நான் கருதுகிறேன். ஒரு நண்பர் எழுதிய கடிதம் இப்படிச்சொல்கிறது; **'தென்றலில் 'கட்டபொம்மன்' நாடகம் வெளியிடுவதன் மூலம், ஒரு சரக்கும் இல்லாமல், கட்டபொம்மனைத் தலையில் தூக்கி ஆடும் சிவஞானத்துக்கு விளம்பரம் கொடுக்கிறீர்கள். இதைப்பார்த்து விட்டு அவர்கள் "நாங்கள் கட்டபொம்மனைக் காட்டினோம். தி. மு. கழகம் இப்போதுதான் புரிந்துகொண்டது!' என்று குதிப்பார்கள். பார்க்கப்போனால், கட்டபொம்மன் வீராதி வீரனும் அல்ல..."**

இதற்கு நான் சொல்வது இதுதான்; தோழர் சிவஞானம் கட்டபொம்மனைத் தமிழன் என்று கொண்டாடுகிறார். 'அவன் கன்னடத்தான்' என்று பெரியார் சொன்னதும், "பல தலை முறைகளுக்கு முன்பே அவன் சந்ததி தமிழ் நாட்டில் குடியேறி விட்டது!" என்கிறார். பல தலை முறைகளுக்கு முன் குடியேறிய கன்னடத்தான், தமிழனாக ஞானஸ்நானம் பெற்று விடுகிறான், அவர் கருத்துப்படி. ஆனால் பலப் பல தலைமுறைகளுக்கு முன் தமிழராகவே இருந்த, ஆந்திர, கேரள, கன்னட தோழர்கள் வேற்று வழியினராகவே கருதப்பட வேண்டுமாம்! 'கட்டபொம்மனை, புரியாமல் தூக்கி வைத்துக்கொண்டு சிவஞானம் ஒப்பாரி வைத்தார் என்பதுதான் இதன் பொருள். கட்டபொம்மன் வீரனோ இல்லையோ, அவனைப் பாராட்டுவதற்கு, தன்னைத் திராவிடன் 'என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களுக்குத்தான் யோக்கியதை உண்டு: ஆகவே 'கட்ட பொம்மன்' நாடகம் வெளியிடுவது, நம்மவனை நாம் புகழ்வதாகவே ஆகும்.

இதைப்போல் தோழர் **காரை முத்துப் புலவரின்** இலக்கியத்தில் காதல் பற்றியும் ரசிகர்கள் மாறுபட்ட கருத்தினைக்கூறியுள்ளார்கள். அவற்றை ஆராய்ந்ததில், இலக்கியத்தில் காதல் நயமாகவும் ஆபாசமில்லாமலும் நிறைய வெளிவர வேண்டும் என்று நண்பர்கள் விரும்புவது தெரிகிறது. ஆகவே அடுத்த இதழில் 'இலக்கியத்தில்காதல்', வள்ளுவனார் சொன்ன வழியாக வரும்.

"ஏற்றுக் கொள்வதா!" என்று ஒரு புதிர்போட்டு கதை கொடுத்து, பதில் கேட்டு வைத்தோம். இதுவரை வந்துள்ள பதில்கள் 2178—இதில் 'மெஜாரிட்டி' பார்த்து அடுத்த இதழில் முடிவு கூறிப் பரிசு வழங்குவோம்.

இப்படிப் பல வகையாலும் ரசிகர்களுடன் தொடர்பு கொள்வதை நான் விரும்புகிறேன். அதை ஒரு பெருமையாகக் கருதுகிறேன். 'தென்றல்' ரசிகர் ஒவ்வொருவரையும் தென்றலின் சொந்தக்காரராக முடிவுகட்டிக் கொள்கிறேன்.

"பழமையை விடாப்பிடியாக பிடித்துக்கொண்டிருப்பவர்களை உயிரோடு கொளுத்துவதே நல்லது"

—சீனமன்னன் உவாங்கிடி

"பெண்ணுக்கு நாணம், மலருக்கு மணம் போன்றது" **—கிரிகரி**

"அறிஞர்களுக்கு வாழ்க்கை ஒரு திருநாள்"

—எமர்சன்

"'நாம் எவ்வளவு நாள் வாழ்வோம்' என்பது முக்கியமானது" **—பெய்லி**

"கலை-கலைக்காக மட்டும் இருக்கக்கூடாது. கொள்கைக்காக—பிரசாரத்திற்காகவும் பயன் படுத்தலாம். நான்—அப்படித்தான் (செய்கிறேன்) செய்தேன்"

—பெர்னாட்ஷா

"காதல்! அது இருதயத்தை அழுத்தும் மலர்! மெல்லிய சிறகு. பிரகாசமான மூடுபனி. குளிர்ச்சியான தீ. நோய் கொண்டசுகம். விழித்துள்ள தூக்கம்"

—யாரோ

"தூய்மையிலே தும்பை; சிரிப்பிலே முல்லை; நடையிலே குருவி; மழலைப்பேச்சிலே, தேனாறு; இவைகள்தான் குழந்தைகள்" **—தாகூர்**

"எதையும் சிந்தனைப்பட்டறையில் போட்டு அலசுபவர்க்கு.நாத்திகர் என்பது பெயரானால்-அந்தபெயருக்கு உரியவன் முதலில் நான்தான்" **—உலகசரிதத்தில் நேரு**

"ஏழையின் ஓய்விற்கு இவ்வுலகில் சோம்பேறித்தனம் என்று பெயர்" **—ஒரு அறிஞர்**

"இளவேனில் ரோஜாவின் இதழ் ஏடு; அதுவே இளமை யெனும் மணம் வீசும் பூக்காடு **—உமர்கயாம்**

'முதியோரின் இறுமாப்பு; இளைஞரிடம் கற்றுக் கொள்ளக்கூடிய அளவிற்கு பணிதல் வேண்டும்"

—எட்மண்ட்பர்க்

கட்டபொம்மன்

சிலம்பின் செல்வன்..

> கதையமைப்பையோ - கற்பனைக்கருத்துக்களையோ - சொற்றொடர்களையோ எடுத்தாள எண்ணுவோர் ஆசிரியர் இசைவு பெறல் வேண்டும்.

[சென்ற இதழ் தொடர்ச்சி]

காட்சி 29

[தானாதிபதி வீடு]

வீரன் : துரைகளே ! இதுதான் தானாதிபதி பிள்ளை வீடு (கதவைத்தட்ட அம்மை யொருத்தி வெளியே வந்து)

தானாதிபதி மனைவி : யார் நீங்கள் ?

சேனாதிபதி : ......உம்......கைது செய்ய வந்திருக்கின்றோம் !

தாமனைவி : யாரை......?

சேனாதிபதி : உன் கணவனை......!

தா மனைவி : என்கணவன் யாரென்று உமக்குத் தெரியுமா ?

சேனாதிபதி: தானாதிபதி பிள்ளை—தெரியும். அந்த ஞானாதிபதியைத்தான் கேட்கின்றேன்.

தா. மனைவி: அவர் வீட்டிலில்லை.

சேனாதிபதி: என்ன ?......வீட்டில் இல்லையா ? எங்கே அந்தத் திருடன் ?

தா. மனைவி : எங்கே அவன் ? என்ன.....மரியாதையற்ற உங்களிடம்...

சேனாதிபதி : பேசமறுக்கின்றாய். எங்கே அவன்? சொல்லுகின்றாயா ? சொல்லச் செய்ய வேண்டுமா ? எங்கே உன் கணவன் எங்கே ?.........எங்கேயடி. உன் கணவன் ?

தா மனைவி : சீ வாயை மூடடா, பெண்ணிடம் பேசத் தெரியாத பேயனே ! என்னிடமா கேட்கின்றாய். பேடிப்பயல் பெண்ணிடம் மோடி காட்டுகின்றான். சீ எட்டநில் துட்டனே. (அடிக்கின்றனர் குழந்தைகள் தாயைக் கட்டிக் கொள்ள எல்லோரையும் அடிக்கின்றனர்—அலறல்)

சேனாபதி: என்ன சொன்னாய் ? இப்போது சொல். வீரர்களையா அவமதித்தாய்.

தா மனைவி : வீரம். நீங்கள் விலைபோட்டு வாங்கவேண்டிய பொருள். பெண்ணை அடிப்பதில்—பிள்ளைகளை வருத்துவதில்—பிணியாளர்களை வதைப்பதில்—வீரம் பெருக்கெடுத் தோடுகின்றது. வெட்கமாயில்லை வீரத்தைப் பற்றிப்பேச.

சேனாபதி : வெறிபிடித்த நாயை இழுத்துச் செல்லுங்கள்.

காட்சி 30

[கட்டபொம்மன் அவை; இராமலிங்க முதலியார் தூதுவருகிறார்]

கட்டபொம்மன் : இராமலிங்க முதலியாரே வாரும் வாரும்!

முதலியார் : வணக்கம் அரசே வணக்கம்.

கட்டபொம்மன் : இணக்கமாயிருந்தால் வணக்கம் ஏற்றுக் கொள்ளத் தக்கதுதான்.

முதலியார் : சுணக்கமில்லாமல் வந்த காரியம் முடிந்தால்...

கட்டபொம்மன் : பிணக்குவியல் பெரும் அளவில். வெள்ளையர்தம் பெருந்தலைகள் மலையளவில். பார்க்கப் பரிதாபமாயிருக்கும் என்கிறீர்......

முதலியார் : ஆம் அரசே ! அதுமட்டுமல்ல. பீரங்கிகளின் பேரிடி முழக்கம்! வெடி மருந்துகளின் விநோத விஷப்புகை, தோட்டாக்களின் வேட்டொளிகள்: இத்தனையும் கேட்டு நம் மறவர் கூட்டம்......

கட்டபொம்மன் : வேட்டெழுந்து வீரத்துடன் போர் புரிந்து வெள்ளையர்களின் கோட்டைகளை மண்ணாக்கி நாட்டைவிட்டே ஓட்டி அடிப்பர் என்கிறீர் ! ஆம் உண்மைதான் ! கன்னித் தமிழ் நாட்டின் வீரத்தை இகழ்ந்து பேசினர் கனக விசயர், என்ற செய்தி காதிற்பட்டதும்—கண்ணகியின் சிலைக்காக அவர்கள் தலையில் கல்சுமத்தி கால் நடையாய்க் கொணர்ந்து செருப் பணிந்த பாதங்களிலே சிரம் வணங்கச் செய்தானே சேரன் செங்குட்டுவன், அவன் பரம்பரையினர் இந்நாட்டு மறவர். அவர்களிடம் வீரத்தாய் வெற்றியைத் தவிர வேறு எதை எதிர்பாக்க முடியும்

முதலியார் : இல்லை அரசே, வில்லும் வேலும்—வாளும் வன் தடியும் கொண்டு போர் செய்த காலம் அது. வெற்றியை வீரன் எதிர்பார்க்கலாம். ஆனால் இது......

கட்டபொம்மன் : சூழ்ச்சியால் வென்று சுயநலத்தைக் காக்கும் காலம் என்கிறீர்...

முதலியார் : இல்லை வெற்றிச் செல்வி விஞ்ஞானஆயுதங்களை விரும்பிச் செல்லுகின்றாள்.

கட்டபொம்மன் : பைத்தியக்கார எண்ணம் .இந்தவீரபாண்டியன் வெற்றியைத்தவிர வேறு எதையும் எங்கும் யாண்டும் கண்டறியாதவன்......

முதலியார் : உண்மைதான்......

கட்டபொம்மன் . வெற்றியும் தோல்வியும் வீரர்க்கு ஒன்றுதான்......

முதலியார் : இம்முறை தாங்கள் தோல்வியை......

கட்டபொம்மன் : எதிர்பார்க்கலாம் என்கின்றீர். என்ன சொன்னீர் பாராண்ட மன்னரையும் நேராண்டு வரும் பாண்டி மரபினருக்குத் தோல்வி. இமயத்திலே கொடி நாட்டிய இனத்தானுக்குத் தோல்வி. கடல் கடந்தும் முரசறைந்த கன்னித்தமிழ் நாட்டானுக்கு தோல்வி. வீரபாண்டிய மரபினருக்குத் தோல்வி. வீரபாண்டிய கட்டபொம்மனுக்கும் தோல்வி. ஏட்டிலே இல்லாத புதிர்—நாட்டிலே நடவாத நாசகாரச் செயல்...

வெள்ளையத்தேவன் : எந்த இடத்திலே பேசுகின்றோம்? என்ன பேசுகின்றோம் என்பதை அறியாமல் பேசி விட்டீர். நாக்குத் துண்டிக்க படுமுன் உமது வாக்கை அடக்கும்.

கட்டபொமமன் : இருக்கட்டும் எங்கு வந்தீர் ?

முதலியார் : அரசே......

கட்டபொம்மன் : அஞ்சாதீர் நெஞ்சுரத்துடன்நிமிர்ந்து சொன்னதைச் சொல்லும்......

முதலியார் : இதோ...(ஓலையைக் கொடுத்தல்)

கட்டபொமமன் : மூன்று மணி நேரத்திலே சரண். இல்லையென்றால்......கோட்டை கொத்தளங்கள் அனைத்தும் குட்டிச் சுவராக்கப்படும்...இல்லையென்றால்,,,,கோட்டை இடிக்கப்படட்டும்...குட்டிச் சுவராக்கப்படட்டும்...எதுவாயினும் முன்வைத்த காலை பின் வைக்க மாட்டான் இந்த முத்தமிழ் நாட்டான். தொடங்கட்டும் போர் தூதராக வந்தீர் உமக்குப் பாதுகாப்பு அளிக்கிறோம். போம் போம் போய்வாரும்...(போர் முழக்கம்)

காட்சி 31

[போர்க்களம்:- வெள்ளையத் தேவனும் காலின்ஸ் துரையும் வாட்போர் புரிகின்றனர்-காலின்ஸ் துரை மார்பிலே வெள்ளையத் தேவனின் ஈட்டி பாய்கிறது...வீரபாண்டிய கட்டபொம்மனின் படையினர் ஆரவாரம் செய்கின்றனர்.]

தானாதிபதி: நம் எதிர்காலம் இந்த நாட்டின் எதிர்காலம்- இந்த நாட்டு மக்களின் எதிர்காலம்—அடிமை வாழ்வா ? அதனை அழிக்க வேண்டும் அதற்காகவாவது நாம் வெளியேறத்தான் வேண்டும்.

கட்டபொம்மன் : ஆம் ! இந்த நாட்டின் எதிர்காலம்—தாயில்லாக் குழவியைப் போலத் தத்தளிக்கும் இந்த நாடு தந்தையில்லா மகன் போலத் தத்தளிப்பர் இந்த நாட்டு மக்கள்.

ஆம் ! வெளியேறுகிறேன், எதற்காக ? வெள்ளையரை விரட்டியடிக்க—அன்னியரை அழித்தொழிக்க—ஆமாம் ! ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்புப்படை திரட்டுவதற்காக:—

ஆனால் வெஞ்சமருக்கு அஞ்சியொளிபவன் இந்த வீரபாண்டிய கட்டபொம்மன் அல்ல. என்பதை வெள்ளையர் கூட்டம் அறியச் செய்கின்றேன்...அறியச் செய்கின்றேன்.

வெள்ளையத்தேவன் : வெற்றி ... வெற்றி...எங்கும் எதிலும் வெற்றி...வெற்றியன்றி வேறெதையும் காணாதவன் இந்த வெள்ளையத் தேவன். அண்டிப்பிழைக்க வந்த ஆலன் கூட்டமே அழிந்துபோ...

மண்டியிட்டு வாழ்வோமென்று மனப்பால் குடித்தனையே மறந்துயோ...ஒண்டித் திரிந்த ஊதாரிக் கூட்டமே எம்மையுமா ? கண்டிக்கத் துணிந்தனை ?...

கட்டபொம்மன் : காலின்ஸ் மடிந்தான் வெள்ளையத்தேவன் ஈட்டி அவன் மார்பிலே பாய்ந்தது. ஏகாதிபத்திய வெறி வெள்ளையத்தேவனின் ஈட்டிக்கு முதற்பலி. கொள்ளையடிக்கும் வெள்ளையரின் அழிவுக்கோர் அடிப்படை தமிழன் தலை நிமிர்ந்தால் இந்தத் தரணியிலுள்ளோர் தலைகளெல்லாம் தரையில் சாயும் என்பதற்கோர் தலைச்சான்று. (தேவனை அணைத்து) தாழ்வுற்ற தமிழர்

சமுதாயத்திலே தப்பிப் பிறந்தவன் நீ; தன்மானத்தின் தங்குமிடம் வீரத்தின் விளைநிலம். வெஞ்சமரின் வில்லன், நாட்டுப் பற்றின் நாயகன் நீதான். அருந்தமிழர் ஆற்றலை அகிலம் அறியச் செய்து விட்டாய்...பகதூர் வெள்ளையாகி விட்டாய்...வாழ்க உன் புகழ் ...வாழ்க...

காட்சி 32

[சாலைவழி]

விகடவி : (பாட்டு)-கொள்ளையடிக்குதொரு கூட்டம்.அதைக்
கும்பிட்டு வாழுதொரு கூட்டம்
நல்லபிள்ளையாக வாழும் கூட்டம்—அது
நச்சினை வைத்திருக்கு நாகப்பாம்பு கூட்டம்
பல்லிளித்துப் பாடுதொரு கூட்டம்-அதான்
பட்டம் பதவி தேடும் நாட்டம்
காட்டிக் கொடுக்குதொரு கூட்டம்...காசு
கைக்கூலி பேசும் நாசக்கூட்டம்...(கொள்ளை)

வீரன் : அட விகட கவியாருக்குக்கூட தெரிந்து விட்டதா ?

விகடகவி : அடே என்னப்பா...

வீரன் : அதான் இப்ப பாடீனீங்களே...காட்டிக் கொடுக்குதொரு கூட்டம்—காசு கைக்கூலி பேசும் நாச கூட்டம்.

விகடகவி : அதுக்கென்னப்பா...உள்ளது தானே...

வீரன்: உள்ளதென்ன உண்மையா முடிஞ்சு போச்சே...

விகடகவி : என்னப்பா ! புதிராப் பேசுகின்றயே!

வீரன்: வீரன் வெள்ளையத்தேவனை ஐயாயிரம் பொன்னிற்காக அவன் மாமன் காடடிக் கொடுத்துவிட்டான்...வெள்ளையத்தேவன் தூக்கிலே...அதோ...

விகடகவி : வெள்ளையத் தேவன் தூக்குக் கயிற்றிலா ? ஐயோ அரசே...ஐயோ...அரசே...வெள்ளையத்தேவனு அழிந்தான் வெள்ளையர் தேவனன்றோ அழிந்து விட்டான். மறவர் குலத்தின் மாணிக்கமே மறைந்தாயா ? ஐயோ அரசே அரசே...இதைக்கேள் இனம் இனத்தைக் காட்டிக் கொடுத்து விட்ட கதையைக்கேள்

காட்சி 33

[கட்டபொம்மன் அவை]

கட்டபொம்மன் : தன்மான முடையானென்று எவனை எல்லோரும் தலைவணங்கினர்களோ அந்தத் தளபதி மறைந்தான். மறவர் குலத்தின் மாணிக்கம் மண்ணோடு மண்ணாக்கப்பட்டான். பிரிந்த பெண்டாட்டியை மீட்க மறைந்திருந்து மாவீரன்வாலியை வஞ்சகமாய் கொன்றனே மானமற்ற இராமன் அதைப்போல போரிலே வெல்லமுடியாத புலையர்கள் காட்டிகொடுக்கும் கயவர்களைக் கைகொண்டு வேட்டையாடி விட்டார்கள் வெள்ளையத்தேவனை வீரபாண்டியன் வலக்கரத்தையே வெட்டி விட்டார்கள். ஆம் வீரபாண்டியனே வெட்டிக் கொன்றுவிட்டார்கள்.

ஊமைத்துரை : அண்ணா... ஆம் முடிந்து விட்டான் வெள்ளையத்தேவன்! மண்ணாகி விட்டான் வெள்ளையத்தேவன் அவன் அழிந்தான். அவன் காட்டியவீரம், அவன் தன்மானம்... அழியவில்லை.

கட்டபொம்மன் : வெள்ளையத்தேவன் தூக்குக்கயிற்றிலே எங்கேயோ தொங்கிக் கொண்டிருக்கும்போது இந்த வீரபாண்டியன் வீணாய் இங்கே தூங்கிக் கொண்டிருக்க மாட்டான்; ஒரு காலும் தூங்கிக் கொண்டிருக்க மாட்டான். பாதர் வெள்ளை இன்று உன்னுடைய ஓர் உயிர் தூக்குக் கயிற்றிலே துடித்ததற்காக நாளை ஓராயிரம் வெள்ளையர்களின் உயிர் போர்களத்திலே துடித்துக் கொண்டிருக்கச் செய்கின்றேன். (வாளையுருவி மேல் நிறுத்தல்; பின் அமைதி)

தானதிபதி : விரைந்து ஓர் முடிவுக்கு வரவேண்டும். கோட்டையை விட்டு வெளியேற வேண்டும்.

கட்டபொம்மன் ; புலி குகையை விட்டுப் புறப்படுவதா ?... வேண்டாம்.

தானதிபதி: இன்றேல் சரணடைய வேண்டும்...

கட்டபொம்மன் : சரணடைய வேண்டும். நாடோடிகளாய் வந்த கூட்டத்தாரிடம் நாடாளும் வேந்தன் சரணடைய வேண்டும், நிறத்தால்—வாழ்க்கை நெறியால்—பேசும் மொழியால்—பிறந்த நாட்டால்-அனைத்தாலும் அன்னியன் அவனிடம் சரணடைவதா அதைக்காட்டிலும் சமரிலே மாள்வோம். அன்றி மீள்வோம்.

தானதிபதி : அரசே மன்னிக்கவும் விடிந்தால் கோட்டை இடிபடும் கொத்தளம் தகர்க்கப்படும்; நாம்.

கட்டபொம்மன்: மறப்போர் புரிந்து மானத்தோடு மாள்வோம்.

காட்சி 34

[எட்டப்ப நாயக்கன்தனியே கையில்கடிதத்துடன் நிற்கின்றான்-மனம் கடிதம் பற்றி சிந்திக்கிறது.]

மனம் : எட்டப்ப நாயக்கரே ! உமது கெட்டிக்காரத் தனத்தால் மட்டிலாப்புகழைக் கட்டியாளப் போகின்றீர் ! நாங்கள் மனம் வைத்தால் இந்த நாட்டு ஆட்சி உம்மை நாடிவரும் ! உமக்குத் தெரியாததா ? என்ன ? பாஞ்சாலங் குறிச்சிக்கோட்டை பாழாக்கப்பட்டது. இடிந்தது கோட்டை ! அழிந்தது பாஞ்சாலங் குறிச்சி ! தப்பினான் வீரபாண்டியன் ! உடன் முப்பத்திரண்டு பேர் ஓடி மறைந்தனர் ஆற்றலற்றுக் காற்றாய்ப்பறந்தனர் அசகாய சூரர்கள்—பயந்தோடிய வீரபாண்டியனைப் பார்த்துப் பிடித்து கொடுத்தால்.

எட்டப்பன் : பட்டம் கிடைக்கும்; பதவி கிட்டும்; பாதுகாப்புத் தேடிவரும் !

மனம் : பட்டம் பதவி, அதற்காகப் பறங்கியருக்குப் பரிந்து பேசுகின்றாயா ?

எட்டப்பன் : ஆமாம் ! பதவியும் பட்டமும் போன பிறகு பாரில் அடைவது என்ன விருக்கிறது !

மனம் : மதி கெட்டு மானமிழக்கப் பார்க்கின்றாய்

எட்டப்பன் : இல்லை ! விதியை மதியால் வெல்லப் பார்க்கிறேன்.

மனம் : விதி ! ஆண்ட பரம்பரை அடிமையாக்கப் படுவதற்கா ? (சிரித்தல்) உன் சகோதரனை—உன் இனத்தானை உன் சொந்த நாட்டானை ஊதாரிகளுக்குக் காட்டிக் கொடுக்கப் பார்க்கின்றாயே ! அதுவா விதி !

எட்டப்பன் : என் வாழ்விற்காக ! என் நாட்டு மக்கள் நலம் பெருவதற்காக

மனம் : எட்டப்பா ! உன் வாழ்விற்காக பட்டஞ் சூடிப் பாராளும் பாண்டி நாட்டு மரபையே குட்டிச்சுவராக்கி விடாதே!

எட்டப்பன் : நானா குட்டிச் சுவராக்கினேன் ?

மனம் , ஆம் ! கட்டப் பொம்மனோடு இந்த எட்டப்பன் ஒட்டி நின்றிருந்தால்...

எட்டப்பன் : ஒட்டி நின்று கட்டியங்கூறச் சொல்லுகின்றாய் சீ ! நிறுத்து ! உன் வறட்டு வேதாந்தத்தை மனிதனை வாழச் செய்யாத வம்பர் வேதாந்தத்தை !

மனம் : எட்டப்பா ! எண்ணிப் பார்த்துச் சொல் இப்போது என்ன செய்யப் போகிறாய் ! சொல் ! சொல் ! சீக்கிரம் சொல் !!!

எட்டப்பன் : சொல்வதென்ன ! இதோ புறப்படுகிறேன்.

மனம் : காட்டிக் கொடுக்கப் புறப்படுவதில் கட்டுக் கடங்காத ஆசையா ?

எட்டப்பன்: ஆம். புறப்பட்டு விட்டேன்! கட்டபொம்மனைக் கைதியாக்கிக் கவர்னர் முன்னே நிறுத்துகின்றேன் ! இதோ புறப்பட்டு விட்டேன் போகிறேன் போகின்றேன் ! கோலார்ப் பட்டிக்கு,

காட்சி 35

[கோலார்ப் பட்டியில்; போர் ஒருபுறம் கட்டபொம்மனைச் சார்ந்தோர் மறுபுறம் எட்டப்பனைச் சார்ந்தோர்]

[தனித்து எட்டப்பனும் கட்டபொம்மனும் போர் செய்கின்றனர். எட்டப்பன் கீழே சாய்கிறான்]

கட்டபொம்மன்: கட்ட பொம்மனைக் காட்டிக்கொடுத்துக் கண்ணியம் பெற எண்ணும் துட்டனே !

[வீரபாண்டியன் வாளினை எட்டப்பன் மார்பிற் பாய்ச்சப் போகின்றான்]

(தொடரும்)

க. அருணசலம் (ராமு)
தோற்றம் : 31-8-33
திருமணம்: 2-7-52
மறைவு: 28-7-54

எனது நன்றி

எனது அருமைச் செல்வமான அருணசலம் என்ற ராமுவை ஜூலை 28-ம் நாள் நான் இழந்து விட்டபோது, நேரில் வந்தும், தந்தி, கடிதங்கள் மூலமாகவும் என்னுடன் வருந்தி ஆறுதலளித்த நண்பர்களுக்கும் தோழர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,
காஞ்சி-கல்யாண சுந்தரம்

பொதும்பயணம்

கண்ணதாசன்

" தமிழினத்தின் கொடும்பகைவன், சதியின் பிள்ளை !
சண்டாளன் ; பழிகாரன் , தென்னர், காரி
உமிழுவதைக் காணுது உரமே மிக்கு
ஓட்டி வந்தான் இந்தியினை ! (த்) தன்னினத்தை
அமிழ்தினிதாய் ஆக்கிவிட !" என்றிவ்வாறு
அறிவுடையோர் எல்லாரும் உரைத்தாரேனும்,
கவிழ்காலம் போந்ததனுற் கொடியோர்மட்டும்
கண்சிவந்து இகழ்கின்றார் எதிர்ப்போர் தம்மை !

தமிழ்த்தந்தை மறைமலையார் மொழியில்வல்ல
தமிழ்வேந்தன் பாரதியார், கரந்தைபெற்ற
தமிழாளன் உமா(ம)கேசுவரனு ரோடும்,
தமிழ்நெஞ்சன் கி. ஆ. பெ. விசுவநாதம்
புகழ்வாய்ந்த அழகிரியார் கூர்மா ரெட்டி,
புதுமைதரு ஈழத்து அடிகள் தாமும்
அமிழ்தான சிறுவார்த்தை வரிசை கட்டி
அளிக்கின்ற திரு. வி. க அண்ணல் மற்றும்

பலலட்சம் தமிழர்களும் எதிர்த்தாரேனும்
பண்பற்ற இனத்தோன்றல் கேட்டாரில்லை !
மலைப்பாம்பு நகருக்குள் புகுந்தாற்போல
மதயானை மனிதஉரு கொண்டாற்போல
குலைத்தாரை வாழையொடு கீழே சாய்க்கும்
கொடுஞ் செய்கை புரிகின்றார் !" பார்ப்பேன் ஓர்கை !
நிலைப்பாரோ திராவிடரைக் காக்க வந்தோர் !
நெஞ்சொடியச் செய்கின்றேன் !" என்கின்றாரே !

இந்தியினை ஒழிப்பதற்கோர் மா நாடிங்கே !
எழிற்சென்னை கோடம்பாக்கத்திற் கூட்டி
வந்திருந்தமக்களெல்லாம் உணர்ச்சி பொங்க
வாள்தாங்கும் அளவிற்கு வலிமை தந்து
செந்தமிழிற் பேசுகின்றார் தலைவர் ! அன்பே
சிவமென்று கருது மறைமலையார் !—அன்று
கொந்தளிப்பைத்துவக்குகிற செய்தியொன்று
கூடியிருந்தோர் காதில் இடியாய் மோதும் !

" அடலேறு! தமிழ்க்காளை ! பொன்னுச்சாமி !
ஆச்சாரியார் வீட்டின் முன்னிருந்து
உபவாசம் கைக்கொண்டு உடல் சுருங்கி
உள்ளத்து உரம்மட்டும் குன்றாய் நின்றோன்.
கடைகெட்டார் உத்தரவால் கைதியானன்,
கடுங்காவல் நாற்பத்திரண்டு நாட்கள் !"
விடம்போலும் இச்செய்தி அவையில் மோத
வீரரெலாம் அணியாக நடக்கலானார்

மாநாட்டுத் தோழரெலாம் ஊர்வலத்தில்
மார்தட்டிச் செல்கின்றார் ! " இந்தி வீழ்க !
தேனான தமிழ்வாழ்க !" என்று கோஷம்
செய்கின்றார் ! சிறைசெல்லத் தாவுகின்றார் !
" வீணான செய்கையினால் ' பட்டர் ' வாழ்வு
வீழு"மெனப் பேசுகின்றார் நகரமக்கள்!
வாழ்த்தொடும் ஒலிமுட்ட அமைச்சர் வீட்டு
வாசலிலே நிற்கின்றார் வீரமக்கள் !

நாயகமும் காஞ்சி மணிமொழியார் தாமும்
நாவல்ல சண்முகா நந்தசாமி
ஆய இவர் மூவருமப்போர் முழக்கம்
ஆச்சாரியார் வீட்டு முன் செய்கின்றார் !
" பாய வரும்புலியோ நீர் ! நரிக்குலத்தீர் !
பண்பான திராவிடரைப் பாரும் ! உம்மால்
மாயவரும் என்றாலும் மனங்கலங்கோம் !
வடநாட்டுலம்பாடி மொழியை ஏலோம் !"

எனமுழங்கி உணர்ச்சியுடன் முடித்தபோது
இரவு மணி பனிரெண்டு ! உடனே அந்த
இனமுழக்கம் செய்திட்ட வீரரெல்லாம்
இருட்டறைக்குள் ஆட்சியினால் தள்ளப்பட்டார் !
" வனமிருகம் ஆளுதடா மாநிலத்தை !
வன் நெஞ்சம் ஆளுதடா தமிழ் நாட்டை !
இனவெறியே ஆளுதடா தென் தேசத்தை !"
என்றெல்லாம் வெளிநாட்டார் பேசலுற்றார் !

முதற்பலிதான் பல்லடத்துப் பொன்னுச்சாமி !
மூண்டுவிட்ட பெரும்போரில் அணிவகுத்து
நதிப்பெருக்காய்ப் பின் சென்ற நல்லோர் பேரை
நவில்வதெனில் இவ்வேடு போதாதம்மா !
பதைபதைத்துத் துறவிகளும் புலவர் தாமும்
படிப்புமிகும் பெரியோரும் சிறைபுகுந்தார் !
வகைமிகுந்த தாய்நாட்டின் மொழிவளர்க்க
மனந்துளியும் கலங்காது சிறையிருந்தார் !

சட்டசபைக்குள்ளேயும் வெளியிலேயும்
சதிகார ஆச்சாரியாரின் பேச்சு
கட்டவிழ்த்து அடக்குமுறை செய்வார் என்னும்
கருத்தினையே காட்டிற்று ! அந்நேரத்தில்
சட்டமெனும் ! இருட்டறை ! யின் துணையால், நந்தம்
தந்தை பெரியார் தமையும் நீதி மன்றில்
துட்டமன ஆச்சாரியார் நிறுத்தித்
" தொலைத்துவிடும் நன்னாளை எதிர்பார்க்கின்றார்

மன்றத்தில் வெண்தாடி அசைகின்று
மகத்தான சமுதாயத் தலைவன் சொன்ன
நன்றாய மொழியாவும் சொல்வேன் ; அந்த
நடுங்காத வீரமொழி கேளீர் ! கேளீர் !
" இன்றிங்கே வீற்றிருக்கும் நீதிமானே !
எதிர்வழக்கு நான் ஆட விரும்பவில்லை !
அன்றாடம் அமைச்சர்களின் ஆணைதாங்கி
' அழகான ' நீதிதரும் அறமன்றத்தில்

நீதியினை எதிர்பார்த்தல் பித்தமாகும் !
நெறிமுறைகள் உங்களுக்கு மறந்த ஒன்று !
சாதியிலும் பார்ப்பனர் நீர் ! நிர்வாகத்தின்
சக்கரத்தில் நீர்ஒருவர் ! ஆள்வோர் சொல்லே
வேதமென கொள்வதுதான் உங்கள்போக்கு !
வீணாக நேரத்தைக் கழித்தல் வேண்டா !
தீதறியாத் தமிழருக்கு வாழ்வளிக்க—
திடமான லட்சியத்திற்(கு) உரமளிக்க

நல்லவிலை கொடுத்துத்தான் ஆகவேண்டும்
நடக்கட்டும் ; தீர்ப்பினைநீர் சொல்வீர் !" என்று
எல்லவரும் இமைப்பின்றிப் பார்த்திருக்க
ஈரோட்டு விடிவெள்ளி உறைபொறிக்கும் !
" தொல்லை மிகுஞ்சிறை கோட்டத்துள்ளே நீவிர்
துயர்காண்க பதினெட்டுத்திங்கள் !" என்று
வெள்ளையர்கள் சட்டத்தின் தீர்ப்பை ஏற்று
வெண்தாடிநல்லார் வெஞ்சிறை புகுந்தார் !

கலங்காதசெல்வம் உளங்கலங்கிவிட்டார்
களத்தலைவன் சம்பந்தம் கண்ணீர் பெய்தார் !
" நலங்காணச் செல்கின்றேன் ! கவலல் வேண்டா !
நடத்துக நற்போர்தனையே தொடர்ந்து !" என்று
களங்காணத் தயங்காத தலைவர் சொன்னார் !
காளையெலாம் இடியோசை எழுப்பலானார் !
அலையாகத் தென்னாட்டார் பின் தொடர்ந்தார் ;
அடுத்துவரும் ' கொலைச் சேதி ' சொல்லேனம்மா

(தொடரும்)

அண்ணாதுரை அறிஞரா?

—: கண்ணதாசன் :—

அறிஞர் அண்ணாதுரைக்கு, 'அறிஞர்' என்று பட்டம் எந்த அவையில் எப்போது யாரால் சூட்டப் பட்டது என்பதை மழுப்பாமல் சொல்லவும்! (இதே கேள்வியை வேறொரு நபர் முரசொலியில் கேட்டதற்கு முரசொலி 2-7-54 இதழில் கொடுத்த பதில் பின் வருமாறு,

"அறிஞர்களால், அவர் அறிஞர் என்பதற்காக. அறிஞர்கள் கூடியுள்ள இடத்தில் கொடுக்கப்பட்டது"—இவ்வாறு தாங்களும் பதில் கூறாமல், சரியான விவரத்தோடு பதில் தர வேண்டுகிறேன்.

27–8–54 அன்பன்
மதுரை தமிழ்ப்பித்தன்

"அறிஞரெனச் சொல்கிறாய்; எதனால் அன்னார்
அறிஞரடா!' என்கின்றாய்! அறைகின்றேன்; கேள்;

* * *

வறிஞரென ஒரு சாதி மாநிலத்தில்
வாழுநிலை கண்டார்கள் பலபேருண்டு!
வறுமையிலே அவர் வீழ்ந்த காரணந்தான்
வகையாகச் சொன்னதில்லை! அவர்களோடு
முறையோடு ஆராய்ந்து விளக்கம் கண்டு
முடிவெடுத்து முன்வைத்தார் ஒருவருண்டேல்,
அறியாய் நீ! நாடறியும்! அவர்தான் அண்ணா!
அறிவறிந்த மக்களுக்கு அறிஞர் அண்ணா!

* * *

வம்பர்களின் மனக்கோளாறாலே நாட்டில்
வகைகெட்ட ராமகதை மதிப்பேறிற்று!
சிம்புகட்டி அதைமக்கள் மனதிலேற்றி
சிறுகூட்டம் செய்த சதிக்கெதிர் விளக்கம்
கம்பரசம்! எண்ணிக்கொள்! ஒன்று! சாதிக்
கயவர்களின் திமிரடங்கும் **குமரிக்கோட்டம்!**
அம்புவியில் தனிப்பாதை அவர் **செவ்வாழை!**
அட **"தாழ்ந்த தமிழகமே!"** அவர் தம்பாளை!
எத்தனை தான் படித்தாலும் சலிப்பேறாது!
எடுத்தெடுத்துச் சொன்னாலும் சுவை தீராது!
அத்தனையும் நம்மக்கள் அறிவுக்கொல்லை!
அணுவளவும் வெறுங்காதை இவ்வே இல்லை!
அழகுமொழி-இழைகருத்து-தெளிவாய்ச் சொன்னார்!
அதனாலே அவர் அறிஞர் அண்ணாவானார்!

* * *

குத்துங்கால் நறுக்கென்னும் ஊசி! ஆனால்
கோணியிலே பாய்கின்ற ஊசியல்ல!
வெத்தூசி அல்லவடா! நோயைத் தீர்க்கும்
மெல்லியதோர்—வைத்தியன்கை—ஊசியாகும்!

* * *

சித்திரச் சொல், முத்தாரங்கொட்டும்! கேட்போர்
சிலையாகி வாய்பிளந்து "ஆகா" வென்பார்!
பத்தியத்தோடச் சொல்லை உண்டுபார்த்தால்
பலகால நோயும் பைத்தியமும் தீரும்!
அறிஞரல்ல எனச் சொலுசும்மா! ஆனால்
அவர்கொடுக்கும் மருந்தையும் நீ உண்டுபாரு!
உறுதியுடன் சொல்கின்றேன், உனக்கிருக்கும்
ஒருகோடி நோயுமுடன் விலகிப்போகும்
பலநோய்க்கும் பகுத்தறிவு மருந்துதந்தார்
பார்புகழ அவர் அறிஞர் அண்ணாவானார்!

* * *

கவிதையெனும் பூக்காட்டைக் காண்பார்!—அங்கே
கண்பதித்து, நற்றேனை உள்ளால் உண்பார்!
"அவதியுறும் மக்களுக்கு எங்கள்வீரன்
அழகுமொழிக் கவிதைகளைக் காணீர்!" என்பார்!
கவிஞருக்கும் தெரியாத விளக்கஞ்சொல்வார்;
காண்போரும் கேட்போரும் வண்டாய்த் தோய்வார்;
உவகையுடன் சிறு துளியாய்ப் பொருளைச் சேர்த்து
ஒருதுளியும் சிதறாது கவிபால்ஈவார்!
பெருமுடிப்பாய் பணமுடிப்பைக் கவிஞர்கொள்வார்!
—(கொண்ட)
மறுநொடியில் வசைபொழிவார் வாய்கூசாது!
"சுருட்டிக்கொண்டோடுகிறான்;"; என்பார் ஏதோ.
"சொத்தெல்லாம் அவர் குடித்துவிட்டாற்போல!
அதுபோதும் அன்னாரைச்சினந்து நோக்கார்!
அதனாலே அவர் அறிஞர் அண்ணாவானார்!

* * *

அபஸ்வரத்தில் பாடுகிறார் தந்தை!—"ஆகா!
அதுபோல வேறுபாட்டெங்கே உண்டு!
சுபஸ்வரத்தால் அபஸ்பரத்தைத் தோற்கடித்தார்
சுயநலமில்லாத தனிப் பெரிய தந்தை

"இதுவன்றோ நற்பாட்டு! இவரைப்போல
எமக்கரிய தலைவர் வேறெங்கே உண்டு!
சுதிவிட்டு நானுமிதோ பாடுகின்றேன்!"
எனப்பாடும் திருவாளர்க் கிவர்தான் நஞ்சு!

"சரியாகப்பாடு! இசை தவறிடாதே!
தவறான இசைக்குப் போடாதே தாளம்!"
அறிவாக இதைச்சொல்வார் அமைதியோடு
அதுகேட்கும் புல்லறிஞர் சீறிப்பாய்வார்!
இழிவான மொழியெல்லாம் கக்கிவீசி
இழவுக்கு வந்தவளை அறுப்பார் தாலி!

அதுபோதும் அன்னாரைச்சினந்து நோக்கார்!
அதனாலே அவர் அறிஞர் அண்ணாவானார்!

அறிஞரென நீ ஒப்பாய்! ஆனால் நல்ல
அறிவுள்ள மனிதரெல்லாம் ஒப்புகின்றார்!
உரிமையுடன் சொல்கின்றேன், அவர் எம் அண்ணா!
உடன்பிறந்தோர் இருந்தாலும் அவர் தான் அண்ணா!

உயரிய முறையில்! புதிய உருவில்

சினிமா, நாடக, நாட்டிய சங்கீத. ரேடியோ செய்திகள்
விமர்சனங்கள், சித்திரங்கள் நிறைந்தது.

கலா நிதி

(கலைத்துறை வார இதழ்)

விலை 2 அணா வருஷ சந்தா ரூ. 6

விற்பனை ஏஜண்டுகள் தேவை

77, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

'உடுமலையான்' எழுதிய

துரோகியின் கண்ணீர்!

தோழர் உடுமலையான் "துரோகியின் கண்ணீர்" என்ற இந்தக் கதையை வெறும் கதையாகத்தான் கூறுகிருர், என்று நீங்கள் கொள்ளவேண்டும். மாருக, யாராவது, இதில் வரும் குமாரசாமியின் பாத்திரத்தில் தோழர் எஸ். எஸ். ராமசாமி படையாச்சியை ஒப்பிட்டுப் பார்த்தால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல. ஆ-ர்.

"என்னம்மா நீ, சுத்த ஒலகம் தெரியாத புள்ளையா இருக்கியே அவ்வளவு பெரிய மனுஷன் நம்ம வீடு தேடிக் கேக்கரப்போ, நாமொ ரெண்டு தடவை யோசிச்சல்ல சொல்லணும்." என்ருன் முருகேசன் தன் மகள் பூங்கொடியிடம்.

"அதுக்கல்லப்பா நம்ம தரத்துக்குத் தகுந்த எடமாயிருந்தா நாளைக்கு எதுனச்சும் ஆயிட்டாலும் சமாளிக்கலாம். பெரிய எடத்துக் காரங்களுக்கு புத்தி ஒரு நெலயா இருக்காதுண்ணு அம்மா பலதரம் எனக்குச் சொல்லியிருக்காப்பா" என்ருள் பூங்கொடி.

"அவ கெட்டா போ. அவளுக்கு என்னம்மா தெரியும் ஆள் தராதரம். இந்தக் காலத்துலே பணம் பெரிசல்லம்மா மனுஷன் குணம்தான் பெரிசு. அவரைப்பத்தி ஊர்லெ "ஒஹோ' ன்னு பேசிக்கிருங்க; நாம வேற மாதிரி நெனைக்கலாமோ. சும்மா தவக்கமில்லாமெ வார்த்தை சொல்லிப் போடட்டுமா" என்ருன் முருகேசன்.

தந்தையின் கேள்வி பூங்கொடியின் மனத்தில் ஓராயிரம் சந்தேகங்களை எழுப்பியது. தூணைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தவள், மௌனத்தைத் துணைக்கழைத்துக் கொண்டாள்

துரோக பட்டணத்து மிராசுதார் குமாரசாமி, பூங்கொடியைத் திருமணம் செய்து கொள்வதற்கு கேட்டிருந்தார். அது சம்பந்தமாகத்தான் மேற்கண்ட உரையாடல் தந்தைக்கும் மகளுக்கும் நடந்தது. குமாரசாமி ஊருலே கொஞ்சம் கண்ணியமான மனுஷர் என்று பெயரெடுத்திருந்தார். இது நாள் வரை எப்படியோ பிரம்மச்சர்யத்தை உடும்பிடியாக கடைப்பிடித்து வந்தவர், ஒரு நாள் வயல் வெளியில் பூங்கொடியை முகத்திற்கு முகம் சந்தித்ததால் ஏற்பட்ட சலனம் மெதுமெதுவாக பிரம்மச்சர்ய விரதத்திற்கு வேட்டு வைத்தது. எத்தனையோ பெரிய இடத்துப் பெண்கள் இவருக்காக வழிமேல் விழி வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அப்படி இருக்கும்போது சாதாரணக் குடும்பத்துப் பெண்ணான பூங்கொடியின் மீது நாட்டம் பாய்ந்து விட்டதால், அவரிடம் ஒரு 'தனித் தன்மை' இருந்திருக்கத்தானே வேண்டும்!

குமாரசாமியின் வேண்டுதல் தனக்கு வந்த பெரும் அதிர்ஷ்டம் என்றே முருகேசன் நினைத்து விட்டான். தன்னுடைய ஓட்டு வீடு இனி மாளிகையாக மாறிவிடும், என்றே கனவு கண்டான். நூல் சேலையைச் சுற்றித் திரிகிற பூங்கொடி, பட்டுச் சேலை உடுத்தி உலவப் போவது போல கற்பனை செய்து அந்த இன்பத்திலேயே நாட்களைக் கழித்துக் கொண்டான்.

திருமண நாள் நிச்சயிக்கப்பட்டது. பணக்காரனுக்கு மனைவியாகப் போகிறோம் என்ற மகிழ்ச்சியை விட, உயர்ந்த இடத்தில் நுழைவதால் ஏற்படும் சங்கடங்களின் நினைப்பு பூங்கொடியின் உள்ளத்திலே நிறைந்திருந்தது. ஒரு நிலையான புத்தியில்லாத பெரிய இடத்து மனிதர்களிடம் காணப்படும் சபலச் செயல்களுக்கு தான் ஒரு சவாலாக இருக்க நேரிடுமோ என்று பலதடவை அஞ்சியதுண்டு. ஆனால் இந்த அச்சத்தை, எதிர்த்துப் போராடும் ஆற்றலை வளர்த்துக் கொண்டு அடக்கிப் பார்த்தாள்.

"சகல வாத்தியம்" என்று பெரியவர்கள் எல்லோரும் ஏகோபித்த குரலில் கூவ, பூங்கொடியின் கழுத்திலே தாலிக் கயிறு ஏறிற்று. அன்பின் அடையாளமாக, விசுவாசத்தின் சின்னமாக அது ஒளி வீசித் தொங்கிக் கொண்டிருந்தது. பூங்கொடியின் அருகில் உட்கார்ந்து அவள் அழகைப் பருகிக் கொண்டிருந்த குமாரசாமியின் குழைவும் நெளிவும், அன்பும் அடக்கமும் எல்லோருக்கும் ஆச்சர்யத்தை உண்டாக்கிவிட்டன!

"ஆசாமி இப்பவோ பெட்டிப் பாம்பாட்டமா அடங்கீட்டாரே" என்ருர் மணப்பந்தலில் ஒருவர்.

"மனுஷர் அவ அழகில் சொக்கிப் போயில்ல குந்திக்கிட்டு இருக்காரு"

"முருகேசன் கொடுத்து வச்சவன் அப்பா."

"அட, போண்ணே, குமாரசாமிதான் கொடுத்து வச்சவர். இது மாதிரித்தங்கச் சிலையாட்டமா பொண்ணு கெடைக்கணுமே. எத்தனை நாள் இந்த சம்பந்தத்துக்கு ஐயா தபசு கிடந்தாரோ, யாருக்குத் தெரியும்"

"ம்...ம். ஐயாவை எல்லாரும் தப்புக் கணக்குப் போட்டே பேசருக. என்ன ஆகுமோ என்னவோ, போகப் போகத்தானே தெரியும். அவரு சிரிப்போட பல அர்த்தங்களையும் புரிஞ்சுக்க ஜனங்களுக்கு இன்னும வெகுகாலம் போகணும்" என்ருர் ஒரு முதியவர்.

இப்படியாக திருமணம் விமரிசையாக முடிந்தது. தங்களுக்குத்தான் பூங்கொடி நிச்சயமாவாள் என்றிருந்தவர்களெல்லாம், கலியாணத்திற்குப் பிறகும் பெருமூச்சு விட்டுக்கொண்டே இருந்தார்கள். ஆனாலும் பூங்கொடியின் பெருமூச்சில் அர்த்தம் நிறைந்து வெளிவந்தது. சில மாதங்கள் மனைவியிடம் விசுவாசம் மிகுந்த கணவனுகத்தான் குமாரசாமி வாழ்ந்து வந்தார். ஊர் ஜனங்கள் எல்லோருமே உதாரணத் தம்பதிகளாக சுட்டிக் காட்டிப் பேசிக்கொண்டார்கள். ஆனல் அவர்களது பேச்சையெல்லாம் வெகு சீக்கிரத்தில் குமாரசாமி மட்டம் தட்டி விட்டார். நாளாக ஆக புத்தியிலே சபலம் தட்டிற்று. பழைய குணம்காற்ருேடு போக ஆரம்பித்தது. எங்கோ தூர ஊரில் உள்ள ஒரு பெரிய குடும்பத்துப் பெண்ணைப் போய் பார்த்துவிட்டு வந்ததாக லேசாக வதந்தி ஊரிலே பரவிற்று. பெரிய பணக்காரியும் ஆனல் சில்லரை குணக்காரியுமான அந்தப் பெண்ணைப் பற்றித் தெரிந்தவர்களெல்லாம் அது எதுக்கிங்க வெறும் வெளிப்பகட்டுதான். அந்தப் பொண்ணு ஏற்கெனவே கொஞ்சம் கெட்டுப்போன வண்ணு உலகம் தெரிஞ்ச விஷயமுங்க. இப்ப அந்த ஆளைத் தானுங்க வீட்டு சமையல் காரனுவே வச்சிருக்காங்க. உங்க தரத்துக்கு ஏத்த எடமல்லங்க அது. கிளி போல பூங்கொடியம்மா இருக்கறப்போ, அதுக்கு ஆசைப்பட்ரது கொஞ்சம் கூட பிடிக்கலீங்க" என்று கிளிப் பிள்ளைக்குச் சொல்லுவது போல நலம் விரும்பிகள் பலர் குமாரசாமிக்கு எடுத்துச் சொன்னர்கள்.

"சுத்த மடையன்கள். ஏதோ மானமாம், விசுவாசமாம். இவனுகளுக்கு என்ன தெரியும் பணம் இருப்பதன் நோக்கமெல்லாம்! எவனையா இந்தக் காலத்தில் யோக்கியமா நடக்கருன்? அதுவும்பொம்பிளை விசயத்துலே ஆண்களெல்லாம் ஒரே கூட்டிலிருந்து வெளியே வந்த பறவைகளைப் போலத்தானே பூங்கொடிக்கு ஏதோ வார்த்தை தவறுனு பூகம்பமா வந்திடும்" என்று குமாரசாமி மறுத்துக் கூற ஆரம்பித்தார்.

வசீகரபுரம் மிராசுதாரினி சொர்ணத்திற்கும் குமாரசாமிக்கும் பலர் அறிய திருமணம் நடைபெற வில்லையே தவிர, "தாலிகட்டிக் கொள்ளாத தம்பதிகள்" என்ற பட்டத்தை கிராமத்து மக்கள் வழங்கினர்கள். குமாரசாமியார் சொர்ணத்திடமே போய் அடைக்கலம் புகுந்து கொண்டார். குமாரசாமியின் இளித்தவாய்த்தனததைக் கண்டு, சொர்ணம் அந்தப்புர ராஜாங்கத்தை ஜரூராக நடத்தினள். எடுபிடி ஆளைப்போல குமாரசாமி ஆகிவிட்டார். தனது அழகால் மட்டுமல்லாமல் அதிகாரத்தையும் பரிபூரணமாகவும் பிரயோகித்து அடிமை போல குமாரசாமியை ஆட்டி வைத்தாள். இந்த அடிமைத்தனத்தை மறைக்கவும் முடியாமல் மறுக்கவும் முடியாமல் திண்டாடினர் குமாரசாமி, சொர்ணத்திடம் சொக்கிப்போன பிறகு, துரோக பட்டணத்திற்கு வருவது வெகுவாகக் குறைந்து விட்டது. தன் மனச்சாட்சியே குத்திக்கொண்டிருந்தது. இருந்தாலும் பூங்கொடிக்கு எதிரில் சொர்ணமும்தானுமாக ஆடம்பரமாகக் காட்சி தரவேண்டும் என்று ஒரு பித்துக்குளி ஆசை குமாரசாமிக்கு அரும்பியது. அந்த ஆசையை நிறைவேற்றவும் பார்த்தார்.

ஆனாலும் பூங்கொடி தனது நிலைமையை எண்ணி கண்ணீர் விடவில்லை. துக்கத்திற்கும் ஏமாற்றத்திற்கும் பதிலாக கண்டிப்பையும் கண்ணியத்தையும் கடைப் பிடித்துக்கொண்டாள் நியாயம் தன் பக்கம் இருக்கிறது என்ற உறுதியால் பூங்கொடியின் பொலிவு பன்மடங்கு உயர்ந்து காணப்பட்டது.

"என்னம்மா பூங்கொடியின் ஐயா இப்பிடி மாறீட்டாரே" என்று பலர் கேட்டதுண்டு.

"இருக்கிறது தானுங்க. தூரத்துப் பச்சை குளுமையா இருக்கும்னு எந்த ஆம்பிளையும் நெனச்சு போறதுண்டல்லங்க. பக்கம் போயிப் பார்த்தாதானே வண்டவாளம் தெரியும். அவங்கவங்க மனசுக்கே பட்டதுண்ணு, அதுவே போதுமுங்க. துரோகம் பண்ணவங்களே, அவுக செஞ்ச துரோகத்தை நெனச்சுப் பார்த்தாலே போதுமுங்க, அதுவே நல்ல தண்டனை தானுங்க" என்பாள்.

திருப்பூரில் முத்தமிழ் விழா !

திருப்பூர் முத்தமிழ்க் கலை வளர்ச்சி மன்றத்தின் சார்பில் 17-10-54 ல் நடை பெறும்.

இயல்:-
கவிஞர் கண்ணதான்,
பன்மொழிப்புலவர் அப்பாதுரை,
தோழியர் அருண்மொழி,
தோழர் க. அறிவழகன்,
நாஞ்சில் கண்ணப்பா.

இசை:-
சிதம்பரம் ஜி. சாந்தகுமாரி குழுவினர்.

நாடகம்:-
ஆண்டவனெங்கே?
(திரு. சிந்தனைச் செல்வன் எழுதியது)

அவரு அந்தப் பெண்ணோடு இங்கே அடுத்த வாரம் வரப் போறதாய் பேசிக்கிறுகளே, அதப்பத்தி உனக்கும் எதுஞச்சும் தெரியுமாம்மா" என்றார் ஒரு ஊர்ப் பெரியவர்.

'தெரியாதுங்க ஐயா உங்க மாதிரியே தான் நானும் சொல்லக் கேள்விப் பட்டேன் வந்தாட்டும் போகட்டும்; அவங்க் முக விலாசத்தை நாலு பேரு இப்ப பார்த்துச் சிரிக்கட்டும்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

அடுத்த வாரமும் வந்தது குமாரசாமிக்கு வேண்டியவர்கள் என்று சொல்லிக்கொண்டு சில புதுப் பேர் வழிகள், பெரும் விருந்துக்கு ஏற்பாடு செய்தார்கள். பூங் கொடிக்குக் கோபம் வருமே என்ற பயத்தால் உள்ளூர அவர்கள் மெதுவாக செத்துக் கொண்டிருந்தாலும் குமார சாமியின் பிரியத்தைப் பெற்று விட்டால் சௌகர்யமாயிருக்கும் என்ற நம்பிக்கையில் காரியங்களை வெகு மும்மரமாகச் செய்யத் தலைப்பட்டார்கள். குமாரசாமியின் குறுஞ்சிரிப்பின் அர்த்தபாவங்களை ஏற்கெனவே புரிந்து கொண்டிருந்த பெரியவர்கள் சிலர் முணுமுணுத்துக் கொண்டே இருந்தார்கள்.

அந்தப் பணக்காரியின் காரிலேயே ஐயாவும் வந்து ஊரில் இறங்கினர். அவருடைய முகத்தைப் போலவே ஊரின் தோற்றமும் 'களை' இழந்து காணப் பட்டது. சம்பளத்திற்கு அமர்த்தப் பட்ட ஆட்களைப் போல, சிலர் வரவேற்பதற்கு ஏற்பாடுகள் செய்து வைத்திருந்தது அவருக்கு திருப்தி அளிக்கவில்லை. அவருக்கு போட்ட மாலையையும் விட, அவர் நெஞ்சு கனமாக இருந்ததை அவர் மட்டுமே உணர்ந்தார்.

அவரை இது நாள் வரை பிடித்திருந்த களங்கம் நீங்கி விட்டதெனவும், புனர் ஜென்மம் எடுத்து வந்திருக்கிறார் என்றும் விருந்துபசாரத்தின்போது குமாரசாமிக்கு வேண்டியவர்கள் பேச்சைக் கொட்டித் தள்ளினர்கள். பூங்கொடியை மணந்தபோதும் இதேமாதிரித் தான் பேசிய வார்த்தைகள், அவரது நெஞ்சை "குஸ்தி கோதா" வாக்கிக்கொண்டிருந்தன. யாருடைய பேச்சுமே புரியவில்லை; அவருக்கு எவருடைய பேச்சும் மனதிற்குப் பிடிக்கவுமில்லை.

'' என்னைப் பற்றிப் பலர் பலவிதமாகப் பேசிக் கொண்டிருப்பதைக் கேள்விப்பட்டேன். பூங்கொடியை நான் கைவிட்டதைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன் முருகேசன் நடையாக நடந்து, பூங்கொடியும் வலிய என்னைப் பார்த்து பலதடவை வயல் வரப்புகளில் சிரித்ததால் தான் திருமணம் செய்துகொண்டேன். ஒரு ஜோஸ்யர் சொர்ணத்தைத் திருமணம் செய்து கொண்டால்தான் என் குலம் செழிக்கும் என்று விடாப்பிடியாகச் சொன்னதால்தான், குலப் பெருமையை கட்டி வளர்க்க ஒரு பிள்ளை தேவை என்ற உயர்ந்த நோக்கத்தோடு தான் இந்தக் காரியத்தைச் செய்தேன். இதில் துரோகம் என்பதற்கு அர்த்தமே கிடையாது. பூங்கொடியும் இதைநினைத்துக் கோபப்பட வேண்டிய அவசியமும் இல்லை. நான் செய்யாமல் இருந்திருந்தால் இந்தக் குற்றச்சாட்டுக்கே இடமிருந்திருக்காதே" என்று ஒருவிதமாக உபசாரத்திற்கு பதில் கொடுத்தார்.

" அடப் பாவி மனுசா! ஆதி மனுஷன் தான் குரங்கிலிருந்து வளர்ந்து வந்தான்னு இந்தக் காலத்துப் படிப்பு படிச்ச எம் பேரப் பிள்ளை சொல்லக் கேட்டிருக்கேன். இந்த மனுஷனுக்கு குரங்கு மாதிரி அல்ல புத்தியும் இருக்கும் போல இருக்கு" என்று விருந்துக்கு வந்த ஒரு பெரியவர் அடக்க முடியாமல் எரிந்து விழுந்தார்.

'' அந்தப் பூங்கொடியைக் கலியாணம் செஞ்சுக்க இந்த மனுஷன் கெஞ்சின கெஞ்சு, தவித்த தவிப்பு எனக்கல்லவா தெரியும்" என்றார் குமாரசாமியின் எதிர் வீட்டுக்காரர்.

மெதுவாகப் பேசிக் கொண்டவர்கள் சொர்ணத்தின் காதுகளில் விழும்படியாக உரக்கப் பேச ஆரம்பித்தார்கள். சொர்ணத்திற்கு உட்கார்ந்திருக்க முடியவில்லை. குமாரசாமியின் முகத்தில் ஈயாடவில்லை. பேயறைந்தது போல உட்கார்ந்திருந்தார். விருந்தில் எல்லா காய்கறிகளும் வேப்பங்காயாக காட்சியளித்தன. பலாச் சுளையை வீசி எறிந்தார். மாம்பழத் துண்டைத் தொடக்கூட இல்லை. சீரகச் சம்பா அரிசிச் சாதத்தை மண்ணைப் போல உணர்ந்து விழுங்கினர்.

'' டேய் உள்ளே நம் ஊர் புது மாப்பிள்ளைக்கு விருந்து நடக்குதுடா. அந்தஆளை காரர் பாத்தியா" என்றான் பந்தலுக்கு வெளியே பம்பரம் ஆடிக்கொண்டிருந்த ஒரு சிறுவன்.

" இல்லெடா. அவரு பழைய மாப்பிள்ளை தாண்டா. பொண்ணுதாம் புதுசு. மேலத் தெரு பூங்கொடி அக்காவை போல ரெண்டு மாசத்துக்கு முந்தி தாண்டா கலியாணம் செஞ்சாரு இப்ப. பெரிய பணக்காரியாம். யாரோ சொர்ணமாம். அவளைக் கட்டிட்டு வந்து உள்ளூர் ஜனங்களுக்குவேடிக்கைகாட்ருர்டா" என்றான் ஒரு குறும்புக்காரன்.

" மொத சம்சாரம் இருக்கவே அவளுக்கு துரோகம் செஞ்சிட்டாரோ"

" அதேல்லாம் இல்லெடா அவர் பெரிய மனுஷரல்லவா அதுக்குப் பேரு துரோகமல்லடா! காருக்கு எவ்வளவு பெரிய பூமாலை பாத்தியா? அத் தாண்டா உலகம்!" என்றான் மூன்றாவன்.

குமாரசாமியின் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் சட்டையின் மேல் விழத் தான் செய்தது. சொந்தஊரில் தனக்குத் தரப்பட்ட அமோக வரவேற்பால் சிந்திய ஆனந்தக் கண்ணீர் என்று பக்கத்திலிருந்தவர்கள் தப்புக் கணக்குப் போட்டனர். தனக்கு உபசாரம் செய்தவர்கள் கூட, மனப் பூர்வமாக உள்ளன்போடு நடந்து கொள்வதில் குறைந்துவிட்டனர் என்று அவரே உணர்ந்து விட்ட பிறகுதான் தெரியவந்தது. இனி தாலும் இப்போது சொர்ணத்தை விட்டு வந்தால் நிலை இன்னும் மோசமாகி விடும் என்ற அச்சத்தில் தவித்துக் கொண்டே கார் ஏறிவிட்டார்.

பகுத்தறிவு ஆசிரியர், ப. க[...]ணன் அவர்கள் இரணியா [...]னும் நோயால் பாதிக்கப்பட்டு வேலூரில் தங்கி சிகிச்சை பெறுகிறார். ஓரிரு மாதங்கள் அவர் எந்தப் பொதுக் கூட்டங்களிலும் கலந்து கொள்ள முடியாது என்பதை தோழர்கள் அறிய விரும்புகிறோம்.

இதோ ஒரு நல்ல படம்!
அசோகா பிக்சர்ஸ்
என் மகள்
ரஞ்சன்—வரலட்சுமி—மைனவதி
நடித்தது
திருச்சி-தஞ்சாவூருக்கு
ரத்ன பிலிம்ஸ்
தெப்பக்குளம் திருச்சி.

இதோ! தலைசிறந்த படங்கள்!
திருச்சி தஞ்சாவூருக்கு நாங்கள் விநியோகிக்கிறோம்
நேஷனல் புரொடக்ஷன்ஸ்:
அம்மையப்பன்
மதருஸ் பிக்சர்ஸ்:
செந்தாமரை
கஸ்தூரி பிலிம்ஸ் பத்மினி பிக்சர்ஸ்:
மேனகா முதல் தேதி
மற்றும்
கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, சொர்க்கவாசல்
நால்வர், பணம், ஆசைமகன், மாங்கல்யம்
மற்றும் பல படங்கள்!
ராணி பிக்சர்ஸ்
திருச்சி.

தொடர் கதை

தமிழாக்கம்: ரா. வேங்கடசாமி

"அது என்னுடைய தவறே இல்லையம்மா? அவர் முகம் மிகவும் குரூரமாக இருந்தது. எனக்கு என்ன செய்வதென்றே புரியாமல் நான் அம்மாதிரி செய்து விட்டேனம்மா!"

"ஏண்டி என்ன செய்வதென்று உனக்குத் தெரியவில்லையா? உன்னுடைய இம்மாதிரியான பயம் அர்த்த மற்றது என்று நான் ஆயிரம் தடவை உனக்குச் சொல்லவில்லை? ஒருவன் மிகவும் முரட்டுத் தனமாக நடந்து கொள்ளுகிறான் என்றால் அவன் உன்னிடம் அளவுக்கு மீறிய வகையில் காதல் கொண்டிருக்கிறான் என்று அர்த்தம்! அப்படிப் பட்ட ஒருவனை நாம் மிகவும் அமைதியான முறையில் சமாளிப்பதுதான் முறை ...நியாயமும் கூட! கதவுக்குப் பின்னால் முத்த மிடுவது தவறு? இதை நீ சொல்வதே வேதனை தரக்கூடிய விஷயமாக இருக்கிறது! இப்படி ஒவ்வொருவனையும் நீ விரட்டினால், உனக்கு எப்படியடி திருமண மாகும்?"

கொஞ்சம் சிரம பரிகாரம் செய்து கொண்டபின் ஜோஸ் மீண்டும் பேசலானாள்.

"என்னவோ அவ்விஷயம் முடிந்து விட்டது. உனக்காக இப்போது எது செய்ய வேண்டு மென்றாலும் என் மனம் இடம் கொடுக்க மாட்டேன் என்கிறது. நீ ஒரு வடிகட்டின முட்டாள். ஒவ்வொரு விஷயத்தையும் உனக்குப்பாடம் சொல்லித் தருவதைப் போல ...பல முறை சொல்லிக் கொடுக்க வேண்டும்!

நீ ஒரு பணக்காரப் பெண்ணல்ல! அதனால் ஆண்களை எப்படி வசமாக்குவது, என்ற கலையை யாவது நன்றாகத் தெரிந்து கொள்! எப்போதும் அமைதியாக இருக்க வேண்டும். ஏப்போதாவது ஒரு தடவைதான் கை குலுக்காமல் தவிர்த்து பிகு செய்து கொள்ள வேண்டும்! உட்கார்ந்திருக்கும்போது மேஜைக்கடியில் கைவிட்டு, உன் காதலன் உன் கால்களை வருடினால் நீ அதற்கு நிச்சயமாக ஈடு கொடுத்து தான் ஆக வேண்டும்! சில சமயத்தில் இம்மாதிரி விஷயங்களை கவனிக்காமல் இருப்பது மிகவும் நல்லது. இவைகளினால் தான் நாம் ஒருவனை வசீகரித்து நம் பக்கம் இழுக்க முடியும்—குழந்தையைப் போல் அடிக்கடி அழுதால், உன் கண்கள் அழகு பெறும் என்று நீ நினைத்தால், அது முட்டாள் தனம்."

பெர்த் அழுது கொண்டிருந்தாள்.

"நீ என்னை மிகவும் தொந்தரவு படுத்துகிறாய்! பெர்த் தயவு செய்து அழுவதை நிறுத்தேன்...! இவளைக் கொஞ்சம் பாருங்களேன்...... உங்கள் மகளைத்தான் சொல்கிறேன். அழுகையை கொஞ்சம் நிறுத்தச் சொல்லுங்கள். முகம் மேலும் அழகிழந்து போய்விட்டால்........நமக்குத் தான் கஷ்டம்!" என்றாள் காஷியரைப் பார்த்து.

"என் குழந்தையே...தயவு செய்து அழாமல் உன் தாயாரின் நல்ல புத்திமதிகளைக் கேளேன். உன் அழகை நீயே கெடுத்துக் கொள்ளாதே.... நான் சொல்வதைக் கேள்!" ஜோஸ் அன்பான குரலில் பேசினார்.

"இவள் சாதாரணமாக இருக்கும்போது நன்றாகத் தான் இருக்கிறாள். அழுதால் தான் கெட்டு விடுகிறது. பெர்த், கண்களை துடைத்துக் கொண்டு என்னைப்பார்! நான் தான் உன் பின்னால் சுற்றிக் கொண்டிருக்கும் ஒரு காதலன் என்று நினைத்துக்கொள். நீ லேசாக சிரிக்க வேண்டும். கையிலிருக்கும் விசிறியை கீழே தவற விட்டுவிட வேண்டும். அப்போது அவன், குனிந்து அதை யெடுத்து உன் கையில் கொடுக்கும்போது லேசாக உன் கை விரல்களைத் தொடுவான். அடடா! அப்படி இல்லையம்மா தலையை மிகவும் விறைப்பாக வைத்துக்கொண்டிருக்கிறாயே! நோயில் தவிக்கும் கோழி போலல்லவா இருக்கிறது உன் தலை! கொஞ்சம் பின்னால் சாய்ந்து கொள். உன் கழுத்து இப்புறமாக வளையட்டும். உன் இளமை தெரிய வேண்டாமா?"

"இப்படியா அம்மா?" என்றாள் பெர்த்.

"ஆம்! அப்படித்தான். விறைப்பாக மட்டும் இராதே. ஆண்கள் கர்வம் பிடித்தவள் என்று அருகே கூட வர மாட்டார்கள். அவர்கள் அதிகம் முயன்றால், நீயும் தயங்காதே... விலகிப்போகக் கூடியவன் நம் சாமார்த்தியத் தினால் தான் அருகே வரவேண்டும்."

ஹாலில் இருந்த கடியாரத்தில் மணி இரண்டடித்தது. மகளுக்கு காதல் பாடம் சொல்லித் தருவதில், தன்னையே மறந்துவிட்டாள் திருமதி ஜோஸ். பெர்த்தை இப்படியும் அப்படியுமாக காகித பொம்மையைப் போல் உருட்டினாள். பெர்த்தும் எல்லாவற்றிற்கும் ஈடுகொடுத்தாள். ஆனால் அவள் உள்ளம் மட்டும் கனத்துவிட்டிருந்தது. வெட்கம் அவள் தொண்டையை அடைத்துக்கொண்டது. ஒரு தடவை, அவள் தாயார் அவளை சிரிக்கச் சொன்னபோது அவள் அழுதே விட்டாள்....அடக்கி வைத்திருந்தது பீறிக்கொண்டு கிளம்பியது இப்போது!

"போதும் அம்மா இந்தப் பாடம் எனக்கு இது பிடிக்கவில்லை!" என்றாள் அவள் அழுகைக்கு நடுவே.

இரண்டாவது தடவையாக திருமதி ஜோஸ்ராண்டு திகைத்து நின்று விட்டாள். வெகுநேரமாக அவளது கை ஊறிக்கொண்டிருந்தது. அதை கவனிக்க இப்போது தான் அவளுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. பெர்த்தின் அருகே வந்து, அவள் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டாள்.

"இந்த இதை வாங்கிக் கொள்...என்னை கோப மூட்டவா வழி செய்கிறாய்? பைத்தியக்காரி.....நான் சொல்வதைக்கேள்! ஆண்கள் எப்போதும் நல்லவர்கள்தான்"

இப்படி சொல்லிவிட்டு அவள் நேராக தன் படுக்கை அறைக்குப்போனாள், மேலிருந்த கொஞ்சநஞ்ச ஆடையையும் கழற்றியபடியே!

"இப்படித்தான் முடியும்!" என்றார் காஷியர் மெதுவாக. அவர் மகளைக்கூட சமாதானப் படுத்த முயலவில்லை. அவள் கன்னத்தை ஒரு கையால் தாங்கிக்கொண்டு, முன்பைவிட அதிக கூச்சலிட்டவாறு தன் அறைக்குப் போனாள்.

பெர்த் பக்கத்து அறையைக் கடந்தபோது வெளியில் அவளது சகோதரன் சாட்டர்னின், நின்று கொண்டிருப்பதைக் கண்டாள். சாட்டர்னின்னுக்கு வயது, இருபத்திஐந்தாகிறது. அவனுக்கு மூளை காய்ச்சல் வந்து, அவனை அரைப் பைத்தியமாக்கி விட்டது. முழுமுழுக்க பைத்தியக்காரன் இல்லை யென்றாலும், சில சமயத்தில் கண் மூடித்தனமாக அக்கிரமங்களைச் செய்து, மற்றவர்களை கலங்க அடிப்பான், அவனுக்குகோபம் வந்தால், பெர்த் ஒருத்தியினால் தான் அவனை சமாதானம் செய்ய முடியும்! பெர்த் குழந்தையாக இருக்கும்போது, அவள் மீது அதிக அக்கரை செலுத்தியவனும் அவன் தான். இருவருக்குள்ளும் பாசம் ஒரு பிணைப்பை ஏற்படுத்தியிருந்தது. அவனைக் கண்டவுடன்,

"மீண்டும் அவள் உன்னை அடிக்க ஆரம்பித்து விட்டாளா?" மெதுவான குரலில் அவன் கேட்டான்.

'அவள்' என்றது தன் தாயாரை.

அவனை அங்கு கண்டதே பெர்த்துக்கு பிடிக்க வில்லை. எப்படியாவது அவனை அனுப்பிவிட முயற்சித்தாள்.

"நீ பேசாமல் உன் படுக்கைக்குப்போ! இதனால் உனக்கு ஆக வேண்டியது ஒன்று மில்லை." என்றாள்.

"ஆக வேண்டிய காரியம் இருப்பதால்தான் சொல்கிறேன். என்னையும் தூக்கத்திலிருந்து எழுப்பிவிட்டு விட்டாள் சப்தம் போட்டு! இனியும் அவள் இம்மாதிரி செய்யாதிருப்பதற்காக இப்போது போய் அவளை கவனிக்கிறேன்!" என்று கிளம்பினான்.

பெர்த் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டாள். அடங்காத ஒரு மிருகத்தை சமாதானம் செய்வதைப் போல், அவள் அவனிடம் பேசத் தொடங்கினாள்.

அவள் பேசப் பேச அவன் அழுதே விட்டான்.

"அடிபட்டாயே உனக்கு வலிக்க வில்லை? எங்கே அந்த இடத்தைக் காட்டு நான் முத்த மிடுகிறேன்!" என்றான்

அவள் கன்னத்தை இருட்டில் கண்டு பிடித்து அதில் முத்த மிட்டான். பிறகு,

"இப்போது பரவா யில்லையா?" என்றான்.

தனிமையில் விடப்பட்ட காஷியர் ஜோஸ்ராண்டு, துக்கம் நெஞ்சை அடைக்க, பேனாவை கீழே வைத்துவிட்டார்; எழுத முடியாமல் சில நிமிஷங்கள் கழிந்த பிறகு

மெதுவாக எழுந்துபோய் ஒவ்வொரு கதவருகிலும் நின்று கவனித்தார் ஏதாவது சப்தம் வருகிறதா என்று? மனைவி தூங்கிக் கொண்டிருந்தாள் குறட்டை விட்டபடி. மகள் அறையிலிருந்து சப்தம் வரவில்லை. எங்கும் இருள். அமைதியும் அங்கே இருந்தது; விளக்கின் வெளிச்சம் அவர் கண்களில் பட்டதும், மீண்டும் எழுத ஆவல் பிறந்தது. மேஜை அருகில் வந்து அமர்ந்தார். இரண்டு பெரிய கண்ணீர்த் துளிகள் அவர் அறியாமல், அவர் கண்களிலிருந்து காகிதத்தின் மேல் உதிர்ந்தன. அமைதியின் பயங்கர ஆட்சி ஆரம்பமாகியது.

அன்று விருந்து அமர்க்களமாக நடந்து கொண்டிருந்தது. மீன் கறி பரிமாறப் பட்டவுடன், வேலைக்காரி அடிலெட் கையில் மது நிறைந்தபாத்திரத்தை எடுத்துக் கொண்டாள். பெர்த் ஒரு பக்கமும்- ஹார்டென்ஸ் ஒரு பக்கமும் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் மாமா பாச்சிலார்டை நடுவில் அமர்த்திவிட்டு. மாமாவின் மதுக கிண்ணம் காலியாக ஆக நிரப்பிக் கொண்டே இருந்தார்கள் சகோதரிகள்.

"மாமா! இன்று உங்களுக்கு நல்ல நாள் அல்லவா... அதனால்... இதோ உங்கள் உடல் நலத்திற்காக கொஞ்சம் குடியுங்கள்" என்று ஒருவர் மாறி ஒருவர் மாமாவை விழுந்து விழுந்து உபசரித்தார்கள். அதற்கும் காரணம் இல்லாமல் போக வில்லை. எப்படியாவது மாமாவிட மிருந்து அன்று இருபது பிராங்குகள் பிடுங்கிக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் முடிவு செய்து, அதற்காக வேலை செய்தார்கள். ஒவ்வொரு வருடமும் திருமதி ஜோஸ் இப்படித் தான் செய்வது வழக்கம். அவளுடைய நிர்பந்தத்தினால் தான் சகோதரிகள் இப்படி பழகிக் கொண்டார்கள் என்றால்...... இதுதான் உண்மை.

பாச்சிலார்டு, ஜோஸின் சகோதரர்.

புதிய செருப்புகள், புதிய துணிகள் இவைகளின் மேலுள்ள ஆசையினால், அந்தப் பெண்களும் அதிகம் தூண்டப்பட்டவர்களாய் இக் காரியத்தில் ஈடுபடுவார்கள்.

மாமாவிட மிருந்து லேசாக பணம் பெயர்ந்து விடாது! அவரிடம் பணம் வாங்க வேண்டுமென்றால், அவருக்கு நன்றாக போதை ஏற்ற வேண்டும்! சொந்தக்காரர்கள் என்றால் அவர் கை தானாக சுருங்கிக் கொள்ளும். இத்தனைக்கும் அவருக்கு வருடம் எண்பதாயிரம் பிராங்குகள் வருமான முண்டு!

"இந்த பழரசம் புதியது... இதைக்கொஞ்சம் பருகிபாருங்கள், நான் சிபாரிசு செய்கிறேன்" என்றாள் தமக்கை, தமயனிடம்.

அவள், அவருக்கு எதிரில் அமர்ந்திருந்தாள்; அவளது இருபக்கத்திலும் இரு வாலிபர்கள் அமர்ந்திருந்தார்கள். இடது புறத்தில் இருந்தவன் கௌலின்; வலது புறத்தில் இருந்தவன் ஹெக்டார் டர்பளாட். அவர்கள் இருவரும் மாமாவுக்கு மிகவும் வேண்டியவர்கள். அதனால் தமக்கை அவர்களிடம் சுமுகமாக நடந்து கொண்டாள். குடும்பத்துக்கு மட்டும் வைக்கப்படும விருந்தாதலால்...சில சமயங்களில் ஜோஸ் மற்றவர்களையும் அழைப்பாள். அதாவது அவளை விருந்துக்கு அழைத்தவர்களை திருப்பி அழைத்து பதில் செய்து விடுவாள். ஆனால் தவிர்க்க வேண்டியவர்களை கட்டாயம் தவிர்த்துவிடுவாள். திருமதி ஜெஸியர் மட்டும் அன்று அழைக்கப்பட்டிருந்தாள். அவளும் இந்த வீட்டில்தான் குடியிருந்தாள். காஷியருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தாள் ஜெஸியர்.

மாமா, இந்த மாதிரி விருந்து நேரங்களில் மிகவும், கன்ராவியாக நடந்து கொள்ளுவார். பேச்சு...நடை எல்லாமே கண்டவர்கள் அருவருக்கத்தக்க வகையில்தான் இருக்கும். இருந்தாலும் அவரிடம் பணம் இருக்கிறதே! அதற்காகத்தான் அவரிடம் சிநேகிதமாக இருப்பதைப்போல பலர் நடித்தார்கள்.

மீன்கறி முடிந்தவுடனே, வெறுங்கறி பரிமாறப்பட்டது. பணத்தைப் பற்றிப் பேச இதுதான் நல்ல சமயமென்று நினைத்த சகோதரிகள் தங்கள் தாக்குதலை மெதுவாக ஆரம்பித்தார்கள்.

"இன்னொரு டம்ளர் குடியுங்கள் மாமா! இன்று உங்களுக்கு நல்ல தினமல்லவா?... ஆமாம் நீங்கள் எங்களுக்கு ஒன்றும் பணந்தரப் போவதில்லையா இந்த நல்ல தினத்தில்?"

"ஏண்டி தராமல்? அவசியம் தருவார். மாமா நீங்கள் எங்களுக்கு இருபது பிராங்குகள் கொடுத்துவிட வேண்டும்!" என்றாள் பெர்த்.

பணத்தைப்பற்றி பேசக் கேட்டவுடன் மாமா, ஏதோ அதிக போதை ஏறிவிட்டவர் போல் நடிக்க ஆரம்பித்தார். அது வழக்கமாக அவர் செய்யும் வேலைதான். ஒன்றும் புதிதல்ல! கண்கள் மேலேறி விட்டன. வாய் திறந்து விட்டது...ஏதோ திடுக்கிட்டவர் போல;

"என்னது?" என்றார்.

"இருபது பிராங்குகள். இருபது பிராங்குகள் பணம் என்ன வென்பது உங்களுக்குத் தெரியாதிருக்க முடியாது. நடிக்காமல் .... பேசாமல் பணத்தை கொடுத்து விடுங்கள்...அடேயப்பா நாங்கள் உங்களை எப்படி நேசிக்கிறோம் தெரியுமா?" என்றாள் பெர்த். அவர் கழுத்தின் மீது இருவரும் கையைவீசி அணைத்துக்கொண்டார்கள். பிறகு இரண்டு பக்கங்களிலும் இருந்தும் அவரை முத்தமிட ஆரம்பித்துவிட்டார்கள், அவர் முகம் இருந்த கோலத்தை சற்றுகூட பொருட்படுத்தாமல்! லட்சியம் பணம் அல்லவா? காஷியருக்கு தன் குமாரத்திகளின் செயலை பார்க்கப் பிடிக்க வில்லை! பாரிசின் விபசாரிகளின் வீடுகளில் படுத்து உழன்ற மாமாவின் உடலை, கன்னிப் பெண்களான இவர்கள் கட்டித்தழுவுவதா?

மாமா கொஞ்சம் கொஞ்சமாக சுய நிலையை இழக்க ஆரம்பித்தார். காய்கறிகள், பீன்ஸ் இவைகளை யெல்லாம் பரிமாறிவிட்டு, அடிலெட் சாதத்தை கொண்டு வந்து வைத்தாள். விருந்தாளிகள் சாதத்தை பார்த்தவுடன், மகிழ்ச்சி அடைந்தார்கள். தக்க சமயம் நெருங்கி வருவதில் சகோதரிகளுக்கு மிகவும் திருப்தி. ஜோஸ் மூன்று பிராங்களுக்கு, ஒரு மதுபாட்டில் வாங்கி வைத்திருந்தாள். சகோதரிகள் அதை உடைத்து, மாமாவுக்கு ஊற்றினார்கள். அதைக் குடித்த மாமாவும் புளகாங்கிதமடைந்தார். சகோதரிகளின் மீது பிரியம் உண்டாகி விட்டது

"என்ன இருபது பிராங்குகளா? ஏன் இருபது பிராங்குகள்? ஓஹோ! உங்களுக்கு இருபது பிராங்குகள் வேண்டுமா? என்னிடம் இப்போது இல்லையே. கௌலினைக் கேளுங்கள். என் பணப் பையை மறந்து வைத்துவிட்டு வந்து விட்டேன். ஹோட்டல் பில்கூட கௌலின்தான் கொடுத்தான். என்னிடம் பணம் இருந்தால்.......என் அருமை வாத்துக் குஞ்சுகளே உங்களுக்கு தரமாட்டேனா?" மாமா இனிக்கப் பேசினார்.

இதைக் கேட்டவுடன் கௌலின் சிரித்துவிட்டான் "கைகார கஞ்சப்பேர்வழி!" என்று முணுமுணுத்தது, அவனது வாய்

மாமாவை இழுத்துவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டவனைப் போல,

"அவர் பையை யெல்லாம் சோதனை போடுங்கள்!" என்றான் சகோதரிகளிடம்.

அதைக் கேட்டவுடன், ஹார்டென்சும், பெர்த்தும் மாமாவின் மீது பாய்ந்தார்கள்.

கேவலம் அந்த இருபது பிராங்குகள், அவர்களை என்ன பாடுபடுத்திவிட்டது? படித்து என்ன பயன்? இப்போது தாங்கள் என்ன செய்கிறோம் என்பதைப் பற்றி சற்றும் எண்ணுமலே துணிந்துவிட்டவர்கள் போலிருந்தது அவர்கள் நிலை! இரண்டு பேரும் மாமாவின் எந்த பையையும் விட்டு வைக்கவில்லை. சிறிதும் கூச்சமில்லாமல் கையை விட்டு பணத்தை தேடினார்கள்.

அவர் மட்டும் சும்மாவா இருந்தார்?

கூடுமான வரை இவர்களிடமிருந்து தப்பிக்க எப்படி, எப்படி முயல வேண்டுமோ அப்படி யெல்லாம் முயற்சித்துப் பார்த்தார்.

பெண்களின் ஸ்பரிசம் பட்டதனால் அவருக்கு சிரிப்பு தான் வந்தது. பலமாக சிரித்தார். சிரிப்பின் நடுவே,

"என்னை நம்புங்கள்........ என்னிடம் காலணுகூட கிடையாது. என்னை விடுங்கள்! நீங்கள் எனக்கு சிரிப்பு மூட்டுகிறீர்கள்!" என்றார்.

பெண்கள் ஓய்ந்து விடுவார்கள் என்பதை அறிந்த கௌலின்,

"கால் சராய் பைகளைப் பார்த்தீர்களா?" என்று ஞாபகமூட்டிவைத்தான்.

நம்பிக்கை அதிகம் வைக்காமல் பெர்த் கால் சராய் பைக்குள் கைவிட்டாள். அவர்கள் இருவர்களுடைய கைகளும் நடுங்கின. பணம் இல்லாவிட்டால் அவர்களுக்கு ஆத்திரம் வராமலா இருக்கும்? மாமாவை அடித்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை!

இந்த நேரத்தில் பெர்த் வெற்றியினால் கூச்சலிட்டாள். அவள் கையில் கத்தை நோட்டுகள் இருந்தன. கடைசியில் அவர்கள் பணத்தை தேடி எடுத்தே விட்டார்கள்!

எதிரிலிருந்த தட்டின்மேல் அவைகளை குவித்து இருபது பிராங்குகள் நாணயத்தை தேடினார்கள் இருவரும். ஒரே ஒரு நாணயந்தான் இருந்தது.

"இதை நான் எடுத்துக் கொள்ளுகிறேன்!" என்று பெர்த் சந்தோஷத்தினால் கூவினாள். அவள் முகம் சிவந்து போய்விட்டது. நெற்றியில் வியர்வைதுளிகள். ஆங்காங்கே நாணயத்தை விளையாட்டுக் காக மேலே தூக்கிப்போட்டு பிடித்தாள். (தொடரும்)

ரங்கசாமி—குன்றத்தூர்

ராமாயணதாசர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பிணத்தைச்சுற்றி வட்டமிடும் கழுகுகள் என்று நினைக்கிறேன்

* * *

பார்த்தசாரதி—சேவூர்

அன்பரே ஆரியர்களின் பூர்வீகத்தைப்பற்றி வரலாறு தெரிய வேண்டுமானல்......?

* * *

ராகுல சாங்கிருத்தியாயன் அவர்கள் எழுதிய 'வால்காவிலிருந்து கங்கைவரை' என்ற நூல் துணைபுரியும் :

* * *

வாசன்—பூண்டி

சிவஞானம் அரசியலில் இருந்து விலகினல்.........!

'வெங்காய' வியாபாரியாகி விடுவார்...என்கிறீர்களா ?

* * *

புயலோன்—சென்னை

தென்றலாரே— தென்னட்டு துரோக காவியத்தின் சில பத்திரங்களைச்சொல்லவும்!

மாணிக்கவேலரில் தொடங்கி—ராமசாமி படையாச்சி வரை தான் அறிமுகமாகி - ராஜாசிதம்பரத்தில் வந்து நிற்கின்றனர். ஓடும் வரலாற்றில் இன்னும் எத்தனை பேர் உருள்கின்றனர் என்பதை பொருத்திருந்து பார்ப்போம்—புயலோய் !

* * *

மு. சீனிவாசன்-கடலூர்

தினத்தந்தி கேலிச்சித்திரத்தில் தி. மு. கவை பருவமங்கையாகப் போடப்படுகிறது. தமிழ் நாட்டில் பருவமங்கை இப்படி இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு வேளை ஆதித்தன் வீட்டுப் பெண்கள் இப்படித்தான் உடை அணிவார்களா?

அவருடைய மடமைக்காக இரங்குவோம, அதற்காக அவர் வீட்டுப் பெண்களை நம்முடைய சகோதரிகளை தாய்மார்களை இகழக்கூடாது !

* * *

தர்மநாதன்-கோவை

"தாமரை அனைய கண்ணும்" என்று ஒரு புத்தகத்தில் ஒரு பாடலைப் பார்த்தேன். பெண்களுடைய கண்களைத் *தாமரைக்கு ஒப்பிடலாமா? தாமரை சிவப்பாக வன்றே இருக்கும்? அவர்கள் கண்கள் நெருப்புப் பந்துகளோ?*

நீர் முதல் வரியைமட்டும் படித்துவிட்டீர் என்று நினைக்கிறேன்.

"தாமரை அனைய கண்ணும்
தடக்கையும் பவளவாயும்
பூமரு பூவைக் கண்ணில்
புதுமலர் ஒளியும் காட்டி
தூமரு நீலமென்னும்
மணிதுணர்ந்தனைய குஞ்சி
காமரு காளை கன்னி
கண்களைச் சிறை
கொண்டிட்டான்"

என்று ஒரு இலக்கியத்தில் ('சூளாமணிச்சருக்கம் என்று ஞாபகம்) வருகிறது. அதைத் தான் நீர் குறிப்பிடுகிறீரா ?

அப்படியென்றல், அதில் 'தாமரை அனையகண்' என்று குறிப்பது- ஆடவனை-காளையை-ப்பற்றியது ! ஆடவனை செந்தாமரைக் கண்ணன்' என்று குறிப்பிடுவதில்லையா ! ? அது தான் இது ,

* * *

அ. தாசன், பெரம்பூர்

நாமக்கல் கவிஞரின் கவிதைகளை வைத்து ஒரு முழுவிளக்கம் தருகிறேன் என்கிறீரே எப்பொழுது தருவீர் ?

வெகுவிரைவில்; அதைப் படித்ததும் நீரே சொல்லும் ; அவரை ஆத்தானக்கவி ஆக்கியவர்களின் மூளைத்திறனை !

* * *

வி. கற்பகம், புதுவை

கடவுள் கலப்பு இல்லாத புராணங்கள் உண்டா? சொல் தென்றலாரே ! பதில் சொல்லும் !

'பார்ப்பான் இல்லாத மைலாப்பூர் உண்டா ?' என்று கேட்பது போல இருக்கிறது உமது கேள்வி

* * *

என். தாமஸ், சாந்தோம்

நீங்கள் இந்து மதத்தை வெறுக்கிறீர்களே, அப்படி என்ருல் ஏன் கிரிஸ்துவமதத்திற்கு வரக்கூடாது ?

"சாக்கடையை விட்டு விட்டு குப்பைமேட்டிற்கு வாடி !" என்ருளாம் ஒருத்தி.

* * *

கே. கே. நாராயணன், தர்மபுரி

பிரஜா சோஷலிஸ்ட் கட்சி எங்கே இருக்கிறது !

தென்னட்டைப் பொறுத்த வரை சமாதியில் இருக்கிறது !

* * *

நீர் ஏன், எல்லா எதிர்க் கட்சிகளையும் தாக்குகிறீர் ?

உருப்படா கூட்டம் ஊர் முழுக்க இருக்கிறதே!

* * *

பி: எஸ். ராஜகோபால்-வடமதுரை

"தசரதன் மூன்று மனைவியரோடுதான் வாழ்ந்தான் என்றும் அறுபதினயிரம் என்பது நிகழ்ந்த சம்பவம் அல்ல" என்றும் சிவஞானம் கூறுகிருரே; இவருக்கு எப்படித் தெரியும் ? கூட இருந்துபார்த்தாரா ?

பின் என்ன ! ராமாயண காலத்திலே அவர் வாழ்ந்தாரையா ! ராமனுக்குப் பதிலாக பதினன்கு வருடம் சிம்மாசனத்தில் வைத்து, பரதன் பூஜித்து வந்தானே அது யார் என்று நினைக்கிறீர்! அட, அதுகிடக்கட்டும்' சிதைக்குத் தூது போனது யாராம் 'சிவஞானம் தானே'!

17-10-54 ஞாயிறு மாலை 6 மணியளவில் சூளை தி. மு. கவின் 4-ம் ஆண்டு விழா பொதுக் கூட்டம் நடைபெறும்.

தலைவர்: **இராசரத்தினம்**

பேச்சாளர்கள் :

A. V. P. *ஆசைத்தம்பி*

S. S. **தென்னரசு**

A. K. **வில்வம்**

துணை ஆசிரியர் 'தென்றல்'
மற்றும் பலர்

இடம்: மாணிக்கச் செட்டி தெருவு,
சூளை, சென்னை

"சென்றவாரம் 'ஜனசக்தி' இதழில் பரவையில் சில தி. மு. க தோழர்கள் கட்சியிலிருந்து விலகியதாகப் பார்த்தேன். அது சம்மந்தமாக உண்மையை பொது மக்களுக்கு விளக்க கட்சியின் சார்பாக நான் கடமைப் பட்டுள்ளேன்.

தோழர்கள் அய்யாச்சாமி, குழந்தை, ஐயாவு, கண்ணுச்சாமி, பிச்சை இந்த ஐவரும் அங்கத்தினர்களோ அனுதாபிகளோ கிடையாது. இவர்கள் தி. மு. கழகத்தில் எந்தத் தொடர்பும் கொள்ளவில்லை. கடந்த மாவட்டக் கழகத் தேர்தலில் தி. மு. கழகம் யாரையும் ஆதரிக்கவில்லை. இவர்களிடம் வேண்டுமென்றே கம்யூனிஸ்ட் தோழர்கள் கையெழுத்து வாங்கி இந்தப் பகுதியில் தி. மு. கவிற்கு உள்ள செல்வாக்கை குறைக்கவும், கடந்த மாவட்டத் தேர்தலில் தங்களுடைய அபேட்சகர் K. P. ஜானகி அம்மாளை இவர்கள் ஆதரிக்கவில்லையே என்ற ஆத்திரம் காரணமாக இந்தப் பொய் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அன்பன்
ப. கார்மேகம்.
பரவை
தி. மு. க. மாவட்ட பிரதிநிதி.
மதுரை மாவட்டம்

வளர்மதி

த. கோவேந்தன்

வளர்மதியைப் போலே— நீ
வளர்ந்திடுவாய் அன்பே !

குளிர் மலர்விழி பூக்கும்
கொஞ்சும் இன்பம் தேக்கும்
இளமதி போல் நாளும்
இன்பமென்னை ஆளும் ! (வளர்)

இரண்டுளத்து இன்பம்
இணைந்திணைந்த அன்பும்
புரண்டு வந்த அலையே
புளக மூட்டும் கலையே ! (வளர்)

முத்துநகை காட்டி
மோகனத்தை யூட்டி
வித்தை காட்டு விப்பாய்
விருந்தமுதின் உப்பாய் ! (வளர்)

ஆடிப்பாடும் இன்பம்
அகற்று விக்கும் துன்பம் !
கோடிக் கோடி பாடல்
கூட்டுவிக்கும் ஆடல் ! (வளர்)

அன்பின் இன்பத் தேனே
அகம் நிறைக்கும் ஊனே
மின்னற் கண்கள் காட்சி
மேதினியின் ஆட்சி ! (வளர்)

கள்ளங் கபட மற்று
காதலின்பம் பெற்று
உள்ளங் குளிர வந்தாய்
உலக வாழ்வைத் தந்தாய் ! (வளர்)

சிரிப்புத்தான் வருகுதையா!

"என்னையா இது! திடீரென்று மறுபடியும் சிரிப்புத்தான் வருகுது' என்கிறீர்கள்!' என்று வாசக நண்பர்கள் ஆச்சரியப் படலாம். ஆமாம், எனக்குக்கூட ஆச்சரியம்தான்! 'தென்றல்' ஆசிரியர், சிலவாரங்கட்கு முன் இந்தப் பகுதி தென்றலில் வேண்டாம் என்று தீர்மானித்து எனக்கு டிக்கட் கொடுத்து விட்டார். திடீரென்று நேற்றுக்காலை நான் ஆசிரியரிடம் போனேன் என் கையில் ஒரு பழைய பத்திரிகை இருந்தது. அதைக் காட்டாமலேயே ஆசிரியரிடம், "சார்! சார்! உங்களைக் கடுமையாகத் தாக்கி ஒரு பத்திரிகை" எழுதியிருக்கிறது!" என்றேன்.

அவர் பதட்டமில்லாமலே "என்ன பத்திரிகை?" என்றார்.

பெயரைச் சொன்னேன்.

"அப்படியும் ஒரு பத்திரிகை தமிழ் நாட்டில் நடக்கிறதா?" என்று ஆச்சரியப் பட்டார்.

"ஆமாம் சார்! அப்படி ஒன்று நடக்கிறது. தமிழ் நாட்டில் யாரும் அதைப் படித்திருக்க நியாயமில்லை. அந்தப் பாவ காரியத்தை நான் செய்ய நேர்ந்தது சார்! உண்மையைச் சொல்கிறேன், சார்! நேற்று மாலை பையனை அனுப்பி மசால் தோசை வாங்கி வரச் சொன்னேன். அவன் அழகாகப் பார்சல் செய்து கொண்டு வந்தான். பிரித்தேன் இந்தப் பத்திரிக்கையாக இருந்தது என்று பத்திரிகையைக் காட்டினேன்"

"இந்தப் பத்திரிகை இப்பொழுது கிடைக்குமா?" என்று கேட்டார்!

"ஓ! கிடைக்கும் சார்!"

"எங்கே?"

"உடுப்பி கிருஷ்ணபவானில் மூன்று வீசை, ஐயர் ஓட்டலில் ஐந்து வீசை—ஆக இப்பொழுதே எட்டு வீசை கொண்டு வர என்றால் முடியும் சார்!" என்றேன்.

"எனக்கு வேண்டுமே?" என்றார்.

"ஏன் சார்! நீங்கள் அதை படிக்க வேண்டாம் சார்! நல்ல பத்திரிகைகளைப் படிக்கிற நேரத்தில் இந்தக் குப்பையை ஏன் சார் படிக்க வேண்டும்?" என்றேன்.

"அட, படிப்பதற்கில்லை ஐயா! என் குழந்தைகள் அடிக்கடி வீட்டை அசுத்தப் படுத்தி விடுகின்றன... அதற்காகத்தான்!" என்றார்.

—இப்படியாக வளர்ந்த பேச்சு, கடைசியில் என்வேண்டுகோளை அவர் மறுக்க முடியாத அளவுக்கு வந்துநின்றது ஆசிரியர் எனக்கு பெர்மிஷன் கொடுத்து விட்டார். வணங்காமுடி வெளிவரும்வரை, ஆசிரியர் சொன்னதுபோல் நயமாக நளினமாக பதம் பார்ப்பேன்.

* * *

சமீபத்தில் நடிகவேள் ராதா ஒரு ராமாயணம் நடத்தி வருகிறாரல்லவா? இது செய்த வேலை அபாரம்! அபாரம்! என்ன சொல்வேன் போங்கள் தேள் கொட்டியதும் குரங்கு குதிப்பது மாதிரி, எறும்பு கடித்ததும் துணி சுமப்போன் (கழுதை என்றால் நயம் போய் விடும் பாருங்கள்; அதனால் தான் 'துணி சுமப்போன்' என்கிறேன்) கத்துகிற மாதிரி, கல்லெறிவிழுந்ததும் பைரவர்' பாடுகிற மாதிரி:—அடடா!" எங்கெங்கு நோக்கினும் ராமாயணம்! என்று பாடத் தோன்றுகிறது! அவ்வளவு பிரசாரம் செய்கிறார்கள்! பதவியிலிருந்து துரத்தப்பட்ட ஆச்சாரியார், காங்கிரசிலிருந்து துரத்தப்பட்ட சிவஞானம், மடத்திலிருந்து துரத்தப்பட்ட ஒரு அடிகள்—இப்படியாக வேலையிழந்த ஐயாமார்களுக் கெல்லாம் ராதா ராமாயணம் ஒரு பெரிய வேலையைக் கொடுத்து விட்டது. "பிரும்மஸ்ரீ" ராஜகோபாலாச்சாரியார் பதவி போய் விட்டாலும் திராவிட இயக்கத்தை 'தார்மீகமாக்குவது' எதிர்க்க வேண்டும் என்பதனால் இந்தவேலையை ஆரம்பித்துள்ளனர் என்று சிலர் சொல்கிறார்கள். இல்லவே இல்லை. உண்மை இதுதான். அவருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை! பலபேர் மீது ஆத்திரம் இருக்கிறது—காமராசர் உட்பட! தனியாக உட்கார்ந்து யோசித்தால் எரிச்சல் தாங்க முடிவதில்லை அதற்காக இப்படிப் புறப்பட்டிருக்கிறார். நாளைக்குப் போய் அவரை எதற்காக வாவது கூப்பிடுங்கள் உடனே தேதி கூடக் கேட்காமல் உங்கள் பின்னாலேயே குதித்துக் குதித்து ஓடிவருவார். எந்த விழா என்று அவசியமில்லை" பிள்ளையார் கோவிலுக்கு ஒரு கக்கூஸ் கட்டுகிறோம் பிள்ளையார் கோவிலின் மலச் சிக்கலைத் தீர்க்க!' என்று கூப்பிடுங்கள் உடனே வந்து விடுவார். வந்து என்ன பேசுவார்?

"நாமெல்லாம் பிள்ளையாரைக் கும்பிட வேண்டும்- இந்தக் கக்கூசைத் திறந்து வைப்பதன் மூலம் என்னுடைய உண்மையான 'நறுமணம் உங்களுக் கெல்லாம் புரியும். உலகத்திலிருக்கிற மதங்களைக் காட்டிலும் இந்துமதம் உயர்ந்தது. கடவுளுக்குக் கக்கூஸ்! ஆகா! காந்திமகான் கனவு நனவாகி விட்டது!" என்பார். அவரது நிலைமை உண்மையில் பரிதாபமாகத்தான் இருக்கிறது. முன்பு ஒருமுறை, "நான் ராமன்" என்றார். பிறகு அவரே "நான் சீதை என்றார்" இனி "நான் பிள்ளையார்" என்பார் அப்புறம் "மாரியாயி" என்பார் "அனுமார்" என்பார். மரத்துக்கு மரம் தாவுவார்! இப்படியே நிரந்தரமாக அவர்காலம் ஓடிக் கொண்டிருக்கும்!

* * *

ராமாயணத்தைப் பற்றி, மடத்திலிருந்து துரத்தப்பட்ட ஒருவர் மாம்பலத்தில் பிரசாரம் செய்தார்; அந்தக் கூட்டத்தை நானும் பார்த்தேன் அடடா எவ்வளவு கூட்டம்! அந்தக் கூட்டத்திலிருந்தவர்கள் அத்தனைபேருடைய பூணூலையும் கழற்றினால் இந்த உலகத்தைச் சுற்றிக்கட்டிவிடலாம் "மாம்பலத்துப் பிராமணாள்" எல்லாம் திரண்டு வந்திருந்தாங்காணும்! சும்மாசொல்லப் படாதையா!

திராவிட இயக்கத்திலே பிரசாரத்திற்குப் போனால், போகிற இடமெல்லாம் ஒரே வரண்ட தலையும் ஒட்டிய வயிறும் தான் காணும். ஆனா, அந்த மாம்பலம் கூட்டத்திலே அடடா பளபளவென்று பரங்கிப்பழம் மாதிரிஒவ்வொருத்தனும் இருந்த அழகும் பராசக்தியோட திரிசூலத்தைப் பிடுங்கி நெத்தியிலே சொருகிண்டு ...நல்ல கேணிக் கயிறு அளவு பூணூல் போட்டுண்டு... மாம்பலத்தில் வெள்ஞ்ச காய்கறி முழுசையும் வயித்துலே ரெப்பிண்டு 'டால் அடிச்சுது ஓய்! அது மட்டுமா! பொம்மனாட்டிங்க எப்பாடீன்னு கேட்டேளோ? செக்கச் செவேல்னு... முன் கொசுவம் வச்சு சேலை கட்டிண்டு... நைஸ் ரவிக்கை போட்டுண்டு ஒவ்வொருத்தரும் உணர்ச்சி பொங்க வந்திருந்தா ஓய்! என்று மாம்பலத்துத் "தமிழர்" ஒருவர்பழக்கவாசனையில் பார்ப்பன பாஷையில் பேசினார்! ஆமாம் ஐயா நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதே முக்கால் பேர் அவாள்தான் இங்கே! அந்த அடிகள் என்ன பேசினார் தெரியுமா?

"ராமனைச் சிலர் அவதாரமல்ல என்கிறார்கள். ராமன் உண்மையில் அவதாரம்தான் அதை இளங்கோவடிகளே சொல்லியிருக்கிறார் (ராஜமாணிக்கமே அனுமார்" என்கிற மாதிரி, இளங்கோவடிகளே) வீட்டைத் திருத்தினால் வீட்டு அவதாரம், தெருவைத் திருத்தினால் தெரு அவதாரம், ஊரைத் திருத்தினால் ஊர் அவதாரம், நாட்டைத்திருத்தினால் நாட்டு அவதாரம் உல கத்தைத் திருத்தினால் உலக அவதாரம்...." என்று அவ கூறினார்.

"அப்படிப் பார்த்தால்..... ராஜகோபாலாச்சாரி மாம்ப அவதாரம், கல்கி கீழ்ப்பாக் அவதாரம், சிவஞானம் இ சப்ப கிராமணித் தெரு அ தாரம், சுப்பிரமணியம் நீ இலாகா அவதாரம், சிவஞா மும் சுப்பிரமணியமும் ந்து விபீஷண அவதாரம் என்று உடனே பக்கத் திருந்த நண்பர் கூறினார்.

ஆங்கிலப் பேரறிஞர் டாக்டர் ஜான்சனின் வாழ்க்கையே ஒரு புதிராக இருந்திருக்கிறது; நெடு நாட்களாக அவர் கிழிந்து தேய்ந்து போன ஒரு ஜோடி செருப்புக்களையே உபயோகித்து வந்தாராம்; அவர் நண்பர் ஒருவருக்கு இது பிடிக்க வில்லை; ஜான்சன் வீட்டில் இல்லாத நேரத்தில் ஒரு புதிய ஜோடிகளை அவர் அறைக்குள் வைத்து விட்டு சென்றார்; வீடுதிரும்பிய ஜான்சன் தன் அறையில் புதிய ஜோடி செருப்புகள் இருப்பதைக்கண்டு திடுக்கிட்டு போனார்; புதிய செருப்புக்களை ஒரு கயிற்றால் கட்டிவிட்டு வெளியே தொங்க விட்டார், "எனக்குத் தெரியாமல் இந்த புதிய ஜோடிகளை என் அறையில் வைத்துவிட்டுப் போனவனை இதில் அடிப்பது தான் நியாயம்" என்று எழுதப்பட்ட ஒரு துண்டு சீட்டு அந்த ஜோடிச் செருப்புகளில் ஒட்டப்பட்டிருந்தது.